தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**மேட்டூர் அணை நீர் திறப்பு அதிகரிப்பு**

மேட்டூர் அணையில் இருந்து இதுவரை 8,800 கனஅடி நீர் திறக்கப்பட்டு வந்தது. அது 13,800 கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அணையின் நீர் இருப்பு 68.49 டிஎம்சியாக உள்ளது. என பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**தமிழகத்தில் தனியார் பால், தயிர் விலை உயர்வு**

தமிழகத்தில் தனியார் பால், தயிர் விலை உயர்த்தப்பட்டுள்ளது. இந்தப் புதிய விலை உயர்வு திங்கள்கிழமை (நவ.10) முதல் அமலுக்கு வருவதாக தனியார் பால் நிறுவனங்கள் அறிவித்துள்ளன. இதுகுறித்து தமிழ்நாடு பால் முகவர்கள் சங்கத் தலைவர் எஸ்.ஏ.பொன்னுசாமி செய்தியாளர்களிடம் சனிக்கிழமை கூறியது: அண்மையில் ஆவின் பால் விற்பனை விலை உயர்த்தப்பட்டது. இதைத் தொடர்ந்து, நவம்பர் 6-ஆம் தேதி முதல், தமிழகத்திலிருந்து வரும் ஆரோக்யா, கெவின்ஸ் பால் நிறுவனங்கள் தங்களின் பால் விற்பனை விலையை லிட்டருக்கு ரூ.4 உயர்த்தின. ஆந்திர மாநிலத்தில் இருந்து வரும் 4 முன்னணி தனியார் பால் நிறுவனங்களில், திருமலா, ஹெரிடேஜ் ஆகிய இரண்டு நிறுவனங்கள் லிட்டருக்கு ரூ.4-ம், டோட்லா, ஜெர்சி ஆகிய இரண்டு நிறுவனங்கள் லிட்டருக்கு வகைக்கு ஏற்ப ரூ.2 முதல் ரூ.4 வரையும் விற்பனை விலையை உயர்த்துவதாக அறிவித்துள்ளன. புதிய விலை உயர்வு திங்கள்கிழமை (நவ.10) முதல் அமலுக்கு வருகிறது. அதே போல், கப் தயிர் விலை, வகைக்கு ஏற்ப ரூ.1 முதல் ரூ.2 வரை உயர்த்தப் படுகிறது. ஒரு கிலோ தயிர், வகைக்கு ஏற்ப ரூ.17-லிருந்து, ரூ.20 வரை

உயர்த்தப்பட்டுள்ளது. பாக்கெட் தயிர் விலையையும் கிலோவுக்கு ரூ.2 வரை உயர்த்துவதாக அறிவித்துள்ளன. தனியார் நிறுவனங்கள் நிகழாண்டில் இதுவரை நான்கு முறை பால் விலையை உயர்த்தியுள்ளன. தற்போது, ஐந்தாவது முறையாக விற்பனை விலை உயர்த்தப்படுகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் இதுவரை 10 முறை தனியார் பால் விலை உயர்த்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. தன்னிச்சையாக செயல்படும் தனியார் பால் நிறுவனங்களின் இந்தச் செயல் கடும் கண்டனத் துக்குரியது. அனைத்து தனியார் பால் நிறுவனங்களும் பால், தயிர் விலை உயர்வை திரும்பப் பெற வேண்டும். தொடர்ந்து உயர்த்தப்படும் பால் விலையால் பாதிக்கப்படுவது பொதுமக்களும், முகவர்களுமே. ஆகையால், தமிழக அரசு இந்தப் பிரச்னையில் தலையிட்டு, தனியார் பால் விலையையும் அரசே நிர்ணயம் செய்யும் வகையில் உடனே சட்டம் இயற்ற முன்வர வேண்டும் என்றார் பொன்னுசாமி.

## பாம்பாற்றின் குறுக்கே காவிரி நடுவர் மன்ற ஆணையை மீறி அணை கட்டும் பணிகள் தொடக்கம்: வி.கே.ராஜமாணிக்கம்



காவிரி நடுவர் மன்ற ஆணையை மீறி, மறையூர் அருகில் உள்ள பட்டிச்சேரி என்ற இடத்தில் பாம்பாற்றின் குறுக்கே புதிய அணையின் கட்டுமானப் பணிகளை கேரள அரசு துவக்கியுள்ளது. நாட்டில் எந்தவொரு மேல்மடை மாநிலமும், கீழ்மடை மாநிலங்களுக்கு வழங்கி வரும் நீரைத் தடுக்கும் விதத்தில் புதிதாக கட்டுமானப் பணிகளில் ஈடுபடக் கூடாது என்கிற காவிரி நடுவர் மன்ற உத்தரவை மீறும் விதத்தில், புதிய அணையின் கட்டுமானப் பணிகளில் கேரள அரசு ஈடுபட்டு வருகிறது. உடுமலையில் இருந்து சுமார் 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது அமராவதி அணை. இதன் முக்கிய நீர்ப்பிடிப்பு பகுதிகளாக பாம்பாறு, சின்னாறு, தேனாறு ஆகியவை இருந்து

வருகின்றன. இதில், 60 சதவீத நீராதாரமாக பாம்பாறு விளங்கி வருகிறது. கேரளத்தின் ஆனைமுடி சிகரத்தில் உற்பத்தியாகும் பாம்பாறு தமிழக எல்லையில் தேனாறுடன் இணைந்து, உடுமலை அருகே அமராவதி அணைக்கு வந்து சேருகிறது. இந்நிலையில், மறையூர் அருகே உள்ள காந்தலூர் ஊராட்சிக்கு உள்பட்ட பட்டிச்சேரி என்ற இடத்தில், பாம்பாற்றின் குறுக்கே புதிதாக அணை கட்டும் பொருட்டு, திருவனந்த புரத்தில் கடந்த 3-ஆம் தேதி நடைபெற்ற விழாவில், முதல்வர் உம்மன் சாண்டி காணொலிக் காட்சி மூலம் அடிக்கல்லை நாட்டினார். இதையொட்டி, பட்டிச்சேரியில் நடந்த விழாவில், அந்த மாநில நீர்ப்பாசனத் துறை அமைச்சர் பி.ஜே.ஜோசப் கலந்து கொண்டார். 75 அடி உயரத்திலும், 440 அடி அகலத்திலும் கட்டப்பட உள்ள இந்த அணையின் கொள்ளளவு சுமார் 2 டிஎம்சி எனக் கூறப்படுகிறது. இதனால், "தமிழகப் பகுதியில் சுமார் 55 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்களும், குடிநீரை நம்பியுள்ள நூற்றுக்கணக்கான கிராமங்களும் பாதிக்கப்படும். அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையை நம்பியுள்ள சுமார் 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரம் முற்றிலும் முடங்கிவிடும் நிலை ஏற்படும் என அப்பகுதி மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். கேரள அரசின் இந்த நடவடிக்கைக்கு, தமிழக முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், திமுக தலைவர் கருணாநிதி, மதிமுக பொதுச் செயலாளர் வைகோ, பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் ராமதாஸ், அமராவதி பாசனப் பகுதி விவசாயிகள் உள்ளிட்டோர் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். மதிமுக பொதுச் செயலாளர் வைகோ வருகிற 15-ஆம் தேதி உடுமலையில் போராட்டம் நடத்தப்போவதாக அறிவித்துள்ளார். மரங்கள் அழிப்பு: இந்நிலையில், பட்டிச்சேரியில் புதிய அணையின் கட்டுமானப் பணிகளை கேரள அரசு தொடங்கிவிட்டது. இதற்காக அந்தப் பகுதியில் உள்ள மரங்களை வெட்டி அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளது. அணை அமையவுள்ள பகுதியில் குடியிருபபவர்கள்

அங்கிருந்து காலி செய்யவும் உத்தரவிடப்பட்டுள்ளது. அணைப் பகுதியில் கூடாரங்கள் அமைக்கப்பட்டு, ஏராளமான தொழிலாளர்கள் கட்டுமானப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். கட்டுமனப் பணிக்காக இரும்புத் தூண்கள் அந்தப் பகுதியில் தயாராகி வருகின்றன. அஸ்திவாரம் அமைப்பதற்காக பெரிய பள்ளங்கள் தோண்டப்பட்டு வருகின்றன. தமிழக அதிகாரிகள் ஆய்வு: இதனிகிடையே, தமிழக பொதுப்பணித் துறையில் ஓய்வு பெற்ற அதிகாரிகள் கொண்ட குழு, 2 வாகனங்களில் நவம்பர் 7-ஆம் தேதி பட்டிச்சேரி சென்று விரிவான ஆய்வுகளை நடத்தி வந்துள்ளது. இதில் புதிய அணையின் கட்டுமானப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருவது தெரியவந்துள்ளது. தடுப்பணை இடிப்பு: இதுகுறித்து பொதுப்பணித் துறை அதிகாரிகள் கூறியது: 1937-ஆம் ஆண்டு பட்டிச்சேரி கிராமத்தில் சிறியதாக ஒரு தடுப்பணை கட்டப்பட்டது. இது அங்கு பெரிய அளவில் உபயோகம் இல்லாமல் இருந்து வந்தது. இந்நிலையில், இந்த தடுப்பணையை அகற்றிவிட்டு புதிதாக அணை கட்ட கேரள அரசு முடிவு செய்து பணிகளைத் துவக்கி உள்ளது. புதிய அணையில் சுமார் 2 டிஎம்சி தண்ணீரைத் தேக்கலாம். பாம்பாற்றுக்கு வரும் தண்ணீரை தடுத்துதான் இந்த அணை கட்டப்படுகிறது என்றனர்.

## <u>கத்தரிக்காய், அவரை விலை பன்மடங்கு உயர்வு</u>

சென்னையில் கத்தரிக்காய், அவரைக் காய், பீன்ஸ் ஆகியவற்றின் விலை கிலோ ரூ.80-ஆக உயர்ந்துள்ளது. சென்னையில் கடந்த சில மாதங்களாக காய்கறிகளின் விலை குறைந்திருந்த நிலையில், தற்போது மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. கடந்த மாதம் சில்லறை விலையில் கிலோ ரூ.25-லிருந்து ரூ.30 வரை விற்பனை செய்யப்பட்ட கத்தரிக்காய் விலை படிப்படியாக அதிகரித்து ஞாயிற்றுக்கிழமை ரூ.80-க்கு விற்பனை செய்யப்பட்டது. அதேபோல, அவரைக் காய், பீன்ஸ், கேரட், வெண்டைக்காய் உள்ளிட்ட பிற காய்கறிகளின் விலையும்

உயர்ந்துள்ளதால் பொதுமக்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர். இதுகுறித்து, சென்னையில் சில்லறை விலையில் காய்கறி விற்பனை செய்துவரும் மணிகண்டன், ராஜா ஆகியோர் கூறியது: சில்லறை விலையில் கடந்த 5 ஆண்டுகளுக்கு மேலாக காய்கறி விற்பனை செய்து வருகிறோம். தினம்தோறும் கோயம்பேடு காய்கறிச் சாந்தையிலிருந்து மொத்தமாக வாங்கி வந்து விற்பனை செய்து வருகிறோம். கடந்த சில நாள்களாக காய்கறிகள் விலை சர சரவென அதிகரித்து வருகிறது. இதனால், பீன்ஸ், கேரட் போன்ற காய்கறிகளுடன், கத்தரிக்காய், வெண்டைக்காய், பாகற்காய் போன்ற காய்கறிகளின் விலையும் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக விற்பனை மந்தமாகியுள்ளது என்றார்.

**சென்னையில் ஞாயிற்றுக்கிழமை சில்லறை விலையில் விற்பனை செய்யப்பட்ட காய்கறிகள் விலை நிலவரம் கிலோவுக்கு**

தக்காளி - ரூ.16

சின்ன வெங்காயம் - ரூ.60

பெரிய வெங்காயம் - ரூ.26

அவரைக்காய் - ரூ.80

வெண்டைக்காய் - ரூ.60

பீன்ஸ் - ரூ.80

கேரட் - ரூ.72

உருளைக்கிழங்கு-ரூ.48

கத்தரிக்காய்-ரூ.80

பீட்ரூட்-ரூ.40

பாகற்காய்-ரூ.60

முள்ளங்கி - ரூ.40

## தொடர் மழையால் மானாவாரி பயிர்கள் அமோக வளர்ச்சி

சின்னமனூர் பகுதியில் மானாவாரி பயிர்கள் அமோக வளர்ச்சி யடைந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். சின்னமனூரைச் சுற்றியுள்ள வெள்ளையம்மாள்புரம், அப்பிபட்டி, ஓடைப்பட்டி, காமாட்சிபுரம், கன்னிச்சேர்வைபட்டி, சீப்பாலக்கோட்டை, எரசக்கநாயக்கனூர் உள்பட பல கிராமங்களில் மானாவாரி விவசாயம் பயிர் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் தொடர்ச்சியாக மழை பெய்தததால், மானாவாரி பயிர்கள் அனைத்தும் நல்ல வளர்ச்சியில் இருப்பதாகவும், இந்தாண்டு நல்ல விளைச்சல் இருக்கும் எனவும் விவசாயிகள் தெரிவித்தனர். மேலும் கடந்த 3 ஆண்டுகளாக போதிய மழையில்லாத காரணத்தால், கிணறுகள் மற்றும் ஆழ்துளைக் கிணறுகள் வறண்டு விட்டன. இதனால் தோட்டப்பயிர் விவசாயம் செய்ய முடியாத நிலைக்கு விவசாயிகள் சென்று விட்டனர். வடகிழக்கு பருவமழை தொடர்ச்சியாக பெய்ததை அடுத்து கிணறுகள் மற்றும் ஆழ்துளைக்கிணறுகளுக்கு தண்ணீர் வரத்து துவங்கியது. இதனை அடுத்து தக்காளி, கத்தரி, பீட்ரூட், கொத்தவரை, கொடி அவரை, முட்டைக்கோஸ், காளிபிளவர் போன்ற தோட்ட விவசாயம் செய்வதிலும் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

## இரண்டாம் போக நெல் நடவுப் பணி தீவிரம்

கம்பம் பள்ளத்தாக்குப் பகுதியில், விவசாயிகள் இரண்டாம் போகம் நெல் நடவுப் பணியில் தீவிரம் காட்டி வருகின்றனர். கம்பம் பள்ளத்தாக்கில், உத்தமபாளையம், போடி, தேனி ஆகிய பகுதிகளில் அரசு பதிவுப் பெற்று 14,707 ஏக்கர்களில் 2 போகம் நெல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. கடந்த சில ஆண்டுகளாக போதிய மழை இல்லாததால் இரண்டாம் போகம் முழுவதும் பாதிக்கப்பட்டது. இந்தாண்டு கம்பம் பள்ளத்தாக்கு பகுதியின் முதல் போக நெல் சாகுபடிக்கு, ஜூன் முதல் வாரத்தில் முல்லைப் பெரியாறு அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

மேலும் இந்தாண்டு, தென் மேற்கு பருவமழை சிறப்பாக இருந்ததாலும், வடகிழக்கு பருவமழை துவங்கியிருப்பதாலும், சிரமம் இல்லாமல் கம்பம் பள்ளத்தாக்குப் பகுதியில் முதல் போக அறுவடை சிறப்பாக முடிந்துள்ளது. மேலும், இரண்டாம் போக நடவுப் பணியும் கடந்த சில நாள்களாக தீவிரமாக நடைபெற்று வருகிறது. இதில் குள்ளப்ப கவுண்டன்பட்டி, நாராயணத்தேவன்பட்டி, உத்தமபாளையம், குச்சனூர், கம்பம், கூடலூர், சாமாண்டிபுரம், காமயகவுண்டன்பட்டி, சுருளிப்பட்டி உள்ளிட்டப் பகுதிகளில் விவசாயிகள், இரண்டாம் போகத்துக்கான நாற்று நடும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். அதேபோல், உத்தமபாளையம் பகுதியில் கிணற்றுப் பாசன விவசாயிகளும் முதல் போக அறுவடை பணி நடந்து கொண்டிருக்கும்போதே, நாற்றங்கால் அமைக்கும் பணியிலும் ஈடுபட்டுள்ளனர். கடந்தாண்டு இரண்டாம் போகம் நெல் பயிரிடப்பட்டு, போதிய தண்ணீர் இல்லாததால் பாதியிலேயே பயிர் கருகியதால், விவசாயிகள் பாதிப்படைந்தனர். எனவே இந்தாண்டு இரண்டாம் போகம் விரைவில் பயிரிட்டு, குறிப்பிட்ட காலத்தில் அறுவடை செய்யும் நோக்கத்தில் நூற்றுக்கணக்கான பெண்களை கொண்டு நடவுப் பணியை விவசாயிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

## <u>செந்தாரப்பட்டி ஏரி நிரம்பியது</u>

சேலம் மாவட்டம், தம்மம்பட்டி அருகேயுள்ள செந்தாரப்பட்டி ஏரி நிரம்பியதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். செந்தாரப்பட்டி ஏரி 120 ஏக்கர் பரப்புடையது. சேலம் மாவட்டத்தில் உள்ள முதல் மூன்று பெரிய ஏரிகளில் இந்த ஏரியும் ஒன்றாகும். கடந்த இரு ஆண்டுகளாக மழையில்லாமல் வறட்சியால், நீரின்றி இந்த ஏரி வறண்டுக் கிடந்தது. தற்போது செந்தாரப்பட்டி பகுதியில் பெய்த மழையால் சுவேத நதியிலிருந்து திருப்பிவிடப்பட்ட கால்வாய் நீரால் இந்த ஏரி நிரம்பியது. இதனால், செந்தாரப்பட்டி ஏரியைச் சுற்றியுள்ள சுமார் 500 ஏக்கர்

விவசாய நிலங்கள் பாசன வசதி பெறும் நிலை ஏற்பட்டுள்ளது. ஏரி நிரம்பியதால் சுற்று வட்டாரப் பகுதியில் உள்ள விவசாயக் கிணறுகளில் நீர்மட்டம் சிறிதளவு உயர்ந்துள்ளது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**எண்ணெய் வித்துக்கள் பயிரிடும் பரப்பு விறுவிறு**



புதுடில்லி:கடந்தாண்டுடன் ஒப்பிடும் போது, நடப்பு ரபி பருவத்தில், எண்ணெய் வித்துக்கள் பயிரிடும் பரப்பு, சிறப்பான அளவில் உயர்ந்துள்ளது.அதேசமயம், கோதுமை பயிரிடும் பரப்பு இன்னும் விறுவிறுப்படையவில்லை என, மத்திய வேளாண் அமைச்சகம் தெரிவித்து உள்ளது.கடந்த, 2013–14ம் ரபி பருவத்தில், எண்ணெய் வித்துக்கள், 28.41 லட்சம் ஹெக்டேரில் பயிரிடப்பட்டிருந்தன. இந்நிலையில், 2014–15ம் நடப்பு ரபி பருவத்தில் இதுவரையில், எண்ணெய் வித்துக்கள் பயிரிடும் பரப்பு, 31.36 லட்சம் ஹெக்டேரை எட்டியுள்ளது.அதேசமயம், கடந்தாண்டில், 9.39 லட்சம் ஹெக்டேரில் கோதுமை பயிரிடப்பட்டிருந்த நிலையில், தற்போது, 4.47 லட்சம் ஹெக்டேரில் மட்டுமே கோதுமைபயிரிடப்பட்டுள்ளது. கோதுமை உள்ளிட்ட இதர பயிர்களின் விதைப்பு பணிகள், வரும் வாரங்களில் விறுவிறுப்படையும். பருவமழை தாமதம் காரணமாக, விதைப்பு பணிகளில் ஏற்பட்ட சுணக்கத்தால், கரீப் பருவ நெல் அறுவடை பணிகள் நிறைவடையாமல், தொடர்ந்து நடைபெற்று வருவதாக, வேளாண் ஆணையர் ஜே.எஸ்.சாந்து தெரிவித்தார்.பொது-

வாக, ரபி பருவ விதைப்பு பணிகள், அக்டோபர் மாதம் முதல் மேற்கொள்ளப்பட்டு, மார்ச் – ஏப்ரலில் அறுவடை செய்யப்படும்.புள்ளிவிவர மதிப்பீட்டின் படி, நடப்பாண்டில், பருப்பு வகைகள் பயிரிடும் பரப்பு, 23.98 லட்சம் ஹெக்டேராக குறைந்துள்ளது. இது, கடந்தாண்டில், 30.86 லட்சம் ஹெக்டேராக உயர்ந்திருந்தது.கரீப் பருவத்தில் ஏற்பட்ட பருவமழை தாமதத்தால், பயிரிடாமல் விடப்பட்ட, 33.70 லட்சம் ஹெக்டேரை, ரபி பருவத்தில், நேர்த்தியாக பயன்படுத்தி கொள்ள வேண்டும் என, மாநில அரசுகளை, மத்திய அரசு கேட்டு கொண்டது.இதன் காரணமாகவே, எண்ணெய் வித்துக்கள் பயிரிடும் பரப்பு, சிறப்பான அளவில் உயர்ந்து உள்ளது.

**<u>வனப்பகுதியில் நீர் வளத்தை பெருக்கும் பணிகள் துவக்கம்</u>**

செங்கல்பட்டு: காஞ்சிபுரம் மாவட்டத்தில், வனப்பகுதியில், நீர் பாதுகாப்பு, காடு அடர்த்தி மேம்பாட்டு திட்டத்தின் கீழ், 6 கோடி ரூபாய் மதிப்பில் பணிகள் துவக்கப்பட்டுள்ளன. 56,862 ஏக்கர் பரப்பளவு காஞ்சிபுரம் மாவட்டத்தில், செங்கல்பட்டு வனசரகத்தில், 18,020 ஏக்கர், திருப்போரூர் வனசரகத்தில், 13,870 ஏக்கர், மதுராந்தகம் வனசரகத்தில், 12,102 ஏக்கர், தாம்பரம் வனசரகத்தில், 8,406 ஏக்கர், ஸ்ரீபெரும்புதுார் வனசரகத்தில், 4,464 ஏக்கர், என, மொத்தம் 56,862 ஏக்கர் பரப்பளவிலும், 230 சதுர கிலோ மீட்டர் வனப்பகுதி அமைந்துள்ளது. இங்கு, 5 சதவீதம் வனப்பகுதி அமைந்து உள்ளது. இங்குள்ள, வனப்பகுதியில், மூலிகை மரங்கள், விலை உயர்ந்த மரங்கள் அடர்த்தியாக உள்ளன. இங்கு, கிளை மான், புள்ளி மான், மயில், முயல், முள்ளம்பன்றி, காட்டு பன்றி, காட்டு பூனை, சிறுத்தை உட்பட பல்வேறு வகையான விலங்கினங்கள் வாழ்கின்றன. வனப்பகுதியில், பல ஆண்டுகளுக்கு முன், சிறிய குளங்களில் மழைநீர் தேங்கி, மூன்று மாதங்களுக்கு தண்ணீர் வற்றாமல் இருக்கும். இதனால், விலங்குகள்

வெளியிடங்களுக்கு செல்லாமல், வனப்பகுதியிலேயே சுற்றி வந்தன. சில ஆண்டுகளாக, காஞ்சிபுரம் மாவட்டத்தில், சரியான அளவிற்கு மழை பெய்யாததால், வனப்பகுதியில் உள்ள குளங்களில் தண்ணீர் வற்றியது. அரசுச்கு கோரிக்கை இதனால், விலங்குகள், தண்ணீருக்காக, ஜி.எஸ்.டி., சாலை மற்றும் கிழக்கு கடற்கரை சாலைகளை கடக்கும்போது, விபத்துக்களில் சிக்கி இறந்து விடுகின்றன. இத்தகைய நிலையை போக்க, திருக்கழுக்குன்றம், திருப்போரூர், தையூர், மதுராந்தகம், காட்டு கூடலுார், தாம்பரம், வண்டலுார், ஸ்ரீபெரும்புதுார், வடக்குப்பட்டு, உத்திரமேரூர், மருதம் ஆகிய வனப்பகுதிகளில், குளம், கசிவுநீர் குட்டைகள், வனப்பகுதியை சுற்றி கால்வாய்கள் ஆகியவை அமைக்கவேண்டும் என, வன துறை அதிகாரிகள், அரசுக்கு கோரிக்கை வைத்தனர். அதை தொடர்ந்து, நீர்பாதுகாப்பு, காடு அடர்த்தி மேம்பாடுத்துதல் திட்டத்திற்காக, நபார்டு வங்கி, 2014- -15ம் நிதியாண்டில், 6 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து. அதைத் தொடர்ந்து, வனப்பகுதியில் குளம், கசிவுநீர் குட்டைகள் அமைக்கும் பணி துவக்கப் பட்டு நடைபெற்று வருகிறது. 2 மாதத்தில்... இதுகுறித்து, வன துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், "வனப்பகுதியில், தண்ணீருக்காக விலங்குகள் வெளியில் செல்லாமல் இருக்க, இங்கேயே, தண்ணீர் வசதி செய்து தரப்படுவதற்கு, குளம், கசிவுநீர் குட்டைகள், வனப்பகு தியிலிருந்து தண்ணீர் செல்லாமல் இருக்க வாய்க்கால்கள் கட்டப் படுகின்றன. இப்பணி இரண்டு மாதத்திற்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது," என்றார்.

**<u>அறிவுறுத்தல்! : இலை வண்ண அட்டையை பயன்படுத்த விவசாயிகளுக்கு... : யூரியா தட்டுப்பாட்டை குறைக்க வேளாண் துறை நடவடிக்கை</u>**

பொன்னேரி: மாவட்டத்தில் நிலவும், யூரியா தட்டுப்பாட்டை குறைக்க, விவசாயிகள், இலை வண்ண அட்டையை பயன்படுத்தும்படி, வேளாண் துறை அறிவுறுத்தி உள்ளது. மீஞ்சூர் ஒன்றியத்தில், 26,500 ஏக்கர் பரப்பளவில், சம்பா சாகுபடிக்காக நெல் பயிரிடப்பட்டு உள்ளது. தற்போது, மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் யூரியா தட்டுப்பாடு ஏற்பட்டு உள்ளது. இலை வண்ண அட்டை மீஞ்சூர் ஒன்றியத்தில், அக்டோபர் மாதம் வரை, 900 டன் யூரியா வினியோகிக்கப்பட்டு உள்ளது. யூரியா தட்டுப்பாட்டை குறைக்க, வேளாண் துறை, இலை வண்ண அட்டையை பயன்படுத்தும்படி விவசாயிகளுக்கு அறிவுறுத்தி உள்ளது. இலை வண்ண அட்டை என்பது, தமிழ்நாடு வேளாண் துறையால், விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படும் கையடக்க அட்டையாகும். அதில், 2, 3, 4, 5 என்ற எண்களுடன், நான்கு வகை பச்சை நிறம் பதிக்கப்பட்டிருக்கும். அதில், எண் 4 மற்றும் 5 உடன் ஒப்பீடு சரியாக இருந்தால், யூரியா இட தேவையில்லை என்றும், எண் 3 உடன் ஒப்பீடு ஆனால், பொன்னி ரக நெல்லுக்கு மட்டும், எண் 2 உடன் ஒப்பீடு ஆனால், ஏக்கருக்கு 12 கிலோ தழைச்சத்து, 25 கிலோ யூரியா இட வேண்டும் என, வேளாண் துறையினர் விவசாயிகளுக்கு அறிவுறுத்தி உள்ளனர். ஒப்பீடு செய்வது எப்படி? பயிர் எண்ணிக்கை சரியாக உள்ள பகுதியில், நோய் மற்றும் பூச்சி தாக்காத குருத்துகளை இங்கொன்றும், அங்கொன்றுமாக 10 இடங்களில் நெற்பயிர்களில் உள்ள இலையை தேர்வு செய்ய வேண் டும். அதில் இளமையான முழுவதும் விரிந்த ஏதாவது ஒரு இலையின் நிறத்தையுடைய இலையை பறிக்காமல், அட்டையில் உள்ள வண்ண பட்டைகளின் மையப்பகுதியில் வைத்து, நிறத்தை ஒப்பிட்டு பார்க்க வேண்டும். நேரடி நெல் விதைப்புக்கு, 21 நாட்களுக்கு பிறகும், கடைசியாக பயிர் பூக்க துவங்கும்போதும் அளவு எடுத்து, இலை வண்ண அட்டையை பயன்படுத்த வேண்டும். சம்பா பருவத்திற்கு, 10 நாட்களுக்கு ஒரு முறை அளவுகள் எடுக்க வேண்டும்.

ஒவ்வொரு முறையும், காலை அல்லது மாலையில், ஒரு குறிப்பிட்ட நேரத்தில் (கூடுமான வரை ஒரே நபர்) சூரியன் பின்னால் இருக்கும்படி, அளவு எடுக்கப்படும் இலையை மறைத்தவாறு அளவீடு செய்ய வேண்டும். அதிக யூரியாவால்... இதுகுறித்து, மீஞ்சூர் ஒன்றிய வேளாண் துறை உதவி இயக்குநர் ரேவதி கூறுகையில், "இலை சுருட்டு புழு மற்றும் குருத்து பூச்சி வருவதை தவிர்க்க, யூரியா பயன்பாட்டை குறைக்க வேண்டும். அதற்கு விவசாயிகள் இலை வண்ண அட்டையை பயன்படுத்த வேண்டும். விவசாயிகள் இலை வண்ண அட்டையை வேளாண் துறை அலுவலகத்தில் இலவசமாக பெற்று கொள்ளலாம்," என்றார். மேலும், "இலை வண்ண அட்டையை பயன்படுத்துவதில் சந்தேகம் இருந்தால், வேளாண் துறை அலுவலகத்தில் தொடர்பு கொள்ளலாம். பூச்சி தாக்குதலை தவிர்ப்பதுடன், யூரியா தட்டுப்பாட்டையும் குறைக்க முடியும்," என்றார்.

## சாத்தனூர் அணை 81 அடி எட்டியது

திருவண்ணாமலை: சாத்தனூர் அணையின் மொத்த கொள்ளளவான, 119 அடியில், தொடர் மழையின் காரணமாக, தண்ணீர் அளவு, 81 அடியை எட்டியது. திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் மாவட்ட விவசாயி களின் வாழ்வாதாரமாக சாத்தனூர் அணை உள்ளது. போதிய பருவமழை இல்லாததால், மூன்று ஆண்டுகளாக, அணை முழுமையான கொள்ளளவை எட்டவில்லை. இந்தாண்டு அணை நிரம்பும் என விவசாயிகள் எதிர்பார்த்தனர். இந்நிலையில், கர்நாடக மாநிலத்தில் தொடர்ந்த கனமழையாலும், கிருஷ்ணகிரி அணையில் இருந்து திறந்து விடப்பட்ட உபரி நீராலும், கடந்த, 15 நாட்களாக சாத்தனூர் அணைக்கு நீர் வரத்து இருந்தது. ஆரம்பத்தில் வினாடிக்கு அதிகபட்சமாக 2,419 கன அடி வரை தண்ணீர் வந்தது. அதை தொடர்ந்து படிப்படியாக நீர் வரத்து குறைந்தது, நேற்று முன்தினம் மாலை தண்ணீர் வரத்து முற்றிலும்

நின்றுவிட்டது. இதனால், சாத்தனூர் அணையின் உயரமான, 119 அடியில் தற்போது, 81.1 அடியை மட்டும் எட்டி உள்ளது. நீர் கொள்ளளவு, 1,600 மில்லியன் கன அடியாக உள்ளது. சாத்தனூர் அணை, இந்தாண்டு முழு கொள்ளளவை எட்ட, விவசாயிகள் தொடர்ந்து, வடகிழக்கு பருவமழையை எதிர்நோக்கி உள்ளனர்.

## <u>நவீன கரும்பு சாகுபடி பயிற்சி</u>

அவலூர்பேட்டை: மேல்மலையனூர் பகுதியில் நடமாடும் வாகனத்தில் நவீன கரும்பு சாகுபடி குறித்த பயிற்சி நடந்தது. செஞ்சி தாலுகா செம்மேடு ராஜ்ஸ்ரீ சர்க்கரை ஆலை சார்பில் தனி பேருந்தில் நவீன கரும்பு சாகுபடி குறித்த ஒலி, ஒளி படக்காட்சிகள் மூலம் விழிப்புணர் வு பயிற்சி முகாம் நடந்தது. துணை பொது மேலாளர் விஜயகுமார் தலைமை தாங்கினார். இதில் மேலாளர் வெங்கடேச பெருமாள், கரும்பு அலுவலர் மணிகண்டன் , சாலிடர் நிறுவன தலைவர் தேவராசன் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர். செக்கடிக்குப்பம், நீலாம்பூண்டி, தாயனூர், சாத்தாம்பாடி, பெருவளூர் உள்ளிட்ட கிராமங்களில், பயிற்சி முகாம் நடந்தது.

## <u>தொடர் மழை எதிரொலி: உளுந்து சாகுபடி அதிகரிப்பு</u>

விருத்தாசலம்: மாவட்டத்தில் தொடர் மழை காரணமாக உளுந்து சாகுபடி பரப்பு அதிகரிக்க வாய்ப்புள்ளது. தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை துவங்கி, கடந்த இரண்டு வாரங்களாக தொடர் மழை பெய்தது. இதனால், மாவட்டத்தில் விருத்தாசலம், அண்ணாகிராமம், பண்ருட்டி, குறிஞ்சிப் பாடி பகுதி விவசாயிகள் முந்திரியில் ஊடுபயிராகவும், தனி பயிராகவும் உளுந்து விதைக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். கடந்தாண்டு வடகிழக்குப் பருவமழை போதியளவு பெய்யாததால், மானாவாரி உளுந்து, மக்காச்சோளம், வேர்க்கடலை விதைப்பு பரப்பளவு குறைந்தது. நடப்பாண்டு பரவலான மழை காரணமாக விவசாயிகள் ஆர்வமுடன்

உளுந்து சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர். இதனால், உளுந்து சாகுபடி பரப்பளவு அதிகரிக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. வேளாண் துணை இயக்குனர் இளங்கோ கூறுகையில், 'தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டம் (பயறுவகை), விதை கிராமத் திடங்களில் மானியத்தில், 100 டன் விதை உளுந்து விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மாவட்டத்தில் 15 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் உளுந்து விதைக்கப்பட்டுள்ளது. பரவலாக மழை பெய்துவருவதால், உளுந்து விதைக்கும் பணியில் விவசாயிகள் தீவிரம் காட்டுகின்றனர். இதனால், கம்மாபுரம், விருத்தாசலம், பண்ருட்டி, குறிஞ்சிப்பாடி உள்ளிட்ட டெல்டா அல்லாத பகுதிகளில் உளுந்து சாகுபடி பரப்பு 50 ஆயிரம் ஏக்கரை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது' என்றார்.

## <u>அவலூர்பேட்டையில் பூ மாலை விலை உயர்வு</u>

அவலூர்பேட்டை: அவலூர்பேட்டை கடைவீதியில் பூ மாலையின் விலை அதிகரித்தது. மேல்மலையனூர் ஒன்றியம் அவலூர்பேட்டையில் மழை மற்றும் முகூர்த்த நாட்களை முன்னிட்டு பூக்களின் விலை உயர்ந்துள்ளது. திருவண்ணாமலை பூ மார்க்கெட்டிலிருந்து அவலூர்பேட்டைக்கு வியாபாரிகள் பூக்களை வாங்கி வருவது வழக்கம். வழக்கமாக ஒரு கிலோ 30 முதல் 40 ரூபாய் வரையில் விலை போகும் சம்பங்கி பூ நேற்று 80 முதல் 100 ரூபாயாக இருந்தது. இதே போல் கேந்தி 80 க்கும், கோழிகொண்டை 50க்கும், பெங்களூர் ரோஸ் கட்டு ஒன்றுக்கு 100 ரூபாயாகவும் இருந்தது. இந்த விலை ஏற்றத்தை தொடர்ந்து 50 ரூபாய்க்கு விற்ற மாலை 70 ஆகவும், 100 ரூபாய் என இருந்த மாலை 150 ஆகவும் விலை உயர்ந்தது. ஒரு முழம் பூ 30 ரூபாய்க்கு விற்கப்பட்டது. விலை ஏற்றம் இருப்பினும் கிராம மக்கள் திருமணம் உள்ளிட்ட விழா நேரங்களில் தவிர்க்க இயலாமல் பூக்களை அதிக விலை கொடுத்து வாங்கி சென்றனர்.

## <u>வேளாண்மையில் இயந்திர மயமாக்கல் திட்டம்; ஆள் பற்றாக்குறையை சமாளிக்க அரசு அதிரடி</u>

நாமக்கல் : வேளாண் தொழிலாளர் பற்றாக்குறையை சமாளிக்கவும், வேளாண் பணிகளுக்கான செலவுகனை கட்டுப்படுத்தவும், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் 2014-15ன் கீழ், "வேளாண் இயந்திரமயமாக்கல் திட்டம்' முனைப்போடு செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், நடப்பாண்டு (2014-15) விவசாயிகளுக்கு விதைப்பு முதல் அறுவடை வரையிலான, அனைத்து செயல்பாடுகளுக்கும் தேவையான நவீன வேளாண் பண்ணை இயந்திரங்கள், கருவிகள், ஆதிதிராவிட விவசாயிகளுக்கும், இதர விவசாயிகளுக்கும் அரசு மானிய உதவியுடன் வழங்க அரசாணை பெறப்பட்டுள்ளது.பலவகை கதிரடிக்கும் இயந்திரங்கள், நெல்நாற்று தயாரிப்பு தானியங்கி கருவி, சுழல் கலப்பை, டிராக்டர் இணைப்புக் கருவிகள், துல்லிய சமன்படுத்தும் கருவி, கரும்பு தோகை தூளாக்கும் இயந்திரம், கரும்பு நடவு இயந்திரம் உள்பட, 13 வகையான வேளாண் கருவிகள் ஆதிதிராவிட, சிறு, குறு மற்றும் பெண் விவசாயிகளுக்கு அதிகபட்சம், 63 ஆயிரம் ரூபாய், அரசு மானியத்திலும், இதர விவசாயிகளுக்கு, 50 ஆயிரம் ரூபாய், அரசு மானியத்திலும் வழங்கப்பட உள்ளன.நெல் நாற்று நடவு இயந்திரத்துக்கு, 94 ஆயிரம் முதல், இரண்டு லட்சம் ரூபாய் வரை (திறனுக்கு தகுந்தாற்போல்) ஆதிதிராவிட, சிறு, குறு மற்றும் பெண் விவசாயிகளுக்கும், இதர விவசாயிகளுக்கு, 75 ஆயிரம் முதல், இரண்டு லட்சம் ரூபாய் வரை அரசு மானிய உதவி வழங்கப்பட உள்ளது.ஆதிதிராவிட சிறு, குறு மற்றும் பெண் விவசாயிகளுக்கு, பவர் டில்லர் அதிகபட்ச மானியமாக, 75 ஆயிரம் ரூபாய் மானியமாகவும், இதர விவசாயிகளுக்கு, 60 ஆயிரம் ரூபாய் மானியமாகவும் வழங்கப்பட உள்ளது. விதைப்பு முதல் அறுவடை வரையிலான, 20 வகை வேளாண் கருவிகள் அரசு மானியத்தில்

வழங்கப்படுகிறது. இவற்றை பெற விரும்பும் விவசாயிகள், சம்பந்தப்பட்ட உதவி செயற்பொறியாளர் அலுவலகங்களை அணுகலாம்.

## விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்

ராசிபுரம் : ராசிபுரம் வேளாண் நிலையம் சார்பில், விதை கிராம திட்டத்தின் கீழ், விவசாயிக்கான பயிற்சி முகாம், செல்லப்பம்பட்டி ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் நடந்தது. வேளாண் உதவி இயக்குனர் வரதராஜு தலைமை வகித்தார். நிலக்கடலை மற்றும் ஆமணக்கு சாகுபடி செய்வது குறித்தும், அதன் தொழில் நுட்பம், தோட்டக்கலைத்துறை மானியத்திட்டம் குறித்தும் விளக்கம் அளிக்கப்பட்டது. தொடர்ந்து விவசாயிகளுக்கு இடு பொருட்கள் வழங்கப்பட்டது.மோளப்பாளையம் பஞ்சாயத்து தலைவர் பெரியசாமி, தோட்டக்கலை துணை அலுவலர் சுப்ரமணியம், மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் (பொறுப்பு) லோகநாதபிரகாசம், வேளாண்மை அலுவலர் ஜெயமாலா, உதவி வேளாண்மை அலுவலர் சங்கர், துணை வேளாண் அலுவலர் பழனிசாமி மற்றும் விவசாயிகள் உள்பட பலர் பங்கேற்றனர்.

## குண்டலப்பட்டியில் காடை வளர்ப்பு பயிற்சி

தர்மபுரி: தர்மபுரி, குண்டலப்பட்டி கால்நடை மருத்துவ ஆராய்ச்சி மையத்தில் காடை வளர்ப்பு தொழில் குறித்து பயிற்சி நடக்கிறது. இதுகுறித்து மைய தலைவர் செந்தில்வேல் வெளியிட்ட அறிக்கை: தர்மபுரி அடுத்த, குண்டலப்பட்டியில் உள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் காடை வளர்ப்பு குறித்தும், அறிவியல் தொழில் நுட்பங்கள் குறித்தும் இலவச பயிற்சி முகாம் வரும், 12ம் தேதி நடக்கிறது. இதில் தரமான காடை வாங்குதல், தீவன உற்பத்தி, நோய் தடுப்பு குறித்து பயிற்சி அளிக்கப்படுகிறது. முகாமில், விவசாயிகள் பங்கேற்று பயனடையலாம்.

**<u>பழைய தோட்டங்களை புதுப்பிக்க மானியம்; நலத்திட்ட உதவி விழாவில் கலெக்டர் தகவல்</u>**

ஊட்டி : நீலகிரியில், 116 பேருக்கு அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. ஊட்டி எச்.ஏ.டி.பி., பயிற்சி மையத்தில், வருவாய் துறை சார்பில், நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. மாவட்ட வருவாய் அலுவலர் பாஸ்கர பாண்டியன் வரவேற்றார். மாவட்ட கலெக்டர் சங்கர் தலைமை வகித்து, நலத்திட்ட உதவிகளை வழங்கி, பேசியதாவது: நீலகிரி மாவட்டத்தை பொறுத்தவரை தோட்டக்கலை பயிர்களின் பரப்பை அதிகரிக்க மானிய விலையில் இஞ்சி, குறுமிளகு, கிராம்பு, தேயிலை நாற்றுகள் வழங்கப்படுகின்றன. பழைய தோட்டங்களை புதுப்பிக்க மற்றும் பசுமை குடில் அமைக்க மானியம் வழங்கப்படுகிறது. பயிர்களில், பூச்சி அரிப்பை கட்டுப்படுத்த விசை, கைத் தெளிப்பான்கள், மானிய விலையில் வழங்கப்படுகின்றன.அதே போல், "அம்மா' திட்டத்தின் கீழ், இதுவரை நடத்தப்பட்ட 325 முகாம்களில், 42 ஆயிரத்து 295 பேர் பயன் பெற்றுள்ளனர். உழவர் பாதுகாப்பு திட்டத்தில், 4 லட்சத்து 65 ஆயிரத்து 728 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர். இதில் 2 லட்சத்து 60 ஆயிரத்து 989 பேர், நேரடியாக விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர்; எஞ்சியோர் அவர்களை சார்ந்து வாழ்கின்றனர். இவ்வாறு, கலெக்டர் சங்கர் பேசினார். நிகழ்ச்சியில், 82 பயனாளிகளுக்கு கல்வி உதவித் தொகையாக 1 லட்சத்து 88 ஆயிரம் ரூபாய், 2 பயனாளிகளுக்கு திருமண உதவித் தொகையாக 18 ஆயிரம் ரூபாய், இயற்கை மரணம், ஈமச் சடங்கு நிதியாக 27 பேருக்கு, 3 லட்சத்து 32 ஆயிரத்து 500 ரூபாய், 2 பயனாளிகளுக்கு முதியோர் உதவித் தொகையாக 2,000 ரூபாய், 3 பயனாளிகளுக்கு தற்காலிக இயலாமை நிதியாக 2 லட்சம் ரூபாய் என, 116 பயனாளிகளுக்கு ரூபாய் 7 லட்சத்து 40 ஆயிரத்து 500 மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில், எம்.பி.,க்கள்

அர்ஜூனன், கோபாலகிருஷ்ணன், "தாட்கோ' தலைவர் கலைச்செல்வன், ஆவின் இணைய தலைவர் மில்லர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட ஊராட்சி தலைவர் மேனகா, ஊட்டி நகராட்சி தலைவி சத்தியபாமா பேசினர். தாசில்தார் ஜான்சிராணி நன்றி கூறினார்.

**<u>கால்நடைகளுக்கு உலர் தீவனம்</u>**

குன்னூர் : குன்னூர் கால்நடை பராமரிப்பு துறை சார்பில், தீவன அபிவிருத்தி திட்டத்தின் கீழ், கால்நடை வளர்ப்போருக்கு தீவனங்கள் வழங்கப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, குன்னூரில் உள்ள கால்நடை வளர்ப்போருக்கு உலர் தீவனமான சோளத்தட்டு உட்பட பிற தீவனங்கள் கிலோ 2 ரூபாய் மானிய விலையில் ஒருவருக்கு 105 கிலோ வீதம் தற்போது 25 பேருக்கு வழங்கப்பட்டது. இதற்கான நிகழ்ச்சியில் கால்நடை டாக்டர்கள் சங்கர், பார்த்தசாரதி முன்னிØல், பலர் வழங்கினர்.

**<u>கோத்தகிரியில் நுங்கு விற்பனை</u>**

கோத்தகிரி : கோத்தகிரியில் நுங்கு விற்பனை களைக்கட்டியுள்ளது. கோத்தகிரி பகுதியில் கடந்த இருநாட்களாக காலை நேரங்களில் கடும் வெயில் அடித்துவருகிறது. மாலை நேரங்களில், மேகமூட்டத்துடன், குளிரான காலநிலை நிலவுகிறது. வெயில் அடிக்கும் நேரத்தில், தேக உஷ்ணத்தை குறைக்கும் வகையில், நுங்கு மற்றும் பதநீர் விற்பனை சூடுப்பிடித்துள்ளது. 30 ரூபாய்க்கு நுங்குடன் பதநீர் வழங்கப்படுகிறது. சமவெளிப் பகுதியை சேர்ந்த பலர், கோத்தகிரி - குன்னூர் மற்றும் ஊட்டி சாலையில், பாண்டியன்பார்க், கட்டபெட்டு, பெட்டட்டி மற்றும் கார்ஸ்வுட் உட்பட, பல இடங்களில் சாலையோர நுங்கு கடை அமைத்துள்ளனர். மக்கள் இதனை அதிகளவில் உட்கொண்டு வருகினறனர்.

## டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு தாமதத்தால்மத்திய கால ரகங்களுக்கு மாறிய விவசாயிகள்

தஞ்சாவூர்: மேட்டூர் அணையில் இருந்து, உரிய நேரத்தில் தண்ணீர் திறக்காததால், சம்பா சாகுபடியில், மத்திய கால விதை நெல் ரகங்களை விவசாயிகள் பயிரிட்டு உள்ளனர். டெல்டா மாவட்டங்களில், நெல் சாகுபடிக்கு நீண்ட கால விதை ரகங்கள் பயன்படுத்தப்படும். சம்பா பருவத்தில், ஆறு மாதத்தில் விளைச்சலாகும் நெல் ரகங்கள் பயன்படுத்தப் படும். தண்ணீர் பற்றாக்குறை போன்ற காரணங்களால், நீண்ட கால விதை ரகமான சாவித்திரி என்ற சி.ஆர். 1009 என்ற விதை நெல் ரகம் அறிமுகப்படுத்தப்பட்டது. இது, 150 நாள் வயதுடைய நெல் ரகம். வறட்சியைத் தாங்கி வளரக்கூடிய இந்த விதை நெல் நல்ல விளைச்சலைத் தரக்கூடியது. நீண்ட கால விதை நெல் ரகத்தைப் பொருத்தவரை, ஆகஸ்ட் மாதத்திலேயே நாற்று விட்டு வளர்த்தால் தான் உரிய காலத்தில் நடவு செய்து, அறுவடை செய்ய முடியும். மேட்டூர் அணையிலிருந்து, ஜூன் அல்லது ஜூலை மாதத்தில் தண்ணீர் திறந்தால் மட்டுமே, சி.ஆர். 1009 ரகம் சாகுபடிக்கு வாய்ப்பு இருக்கிறது. தற்போது, மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறப்பு தள்ளிப்போனது மட்டுமின்றி, ஆக, 10ம் தேதி தான் திறக்கப்பட்டது. எனவே, நீண்ட கால விதை நெல் ரகத்தை பயிரிடுவோர் ஆக. 31ம் தேதிக்குள் நாற்று விட்டிருக்க வேண்டும். அதன் பின், விதைப்பவர்கள் மத்திய கால விதை நெல் ரகங்கள், பிபிடி 5204, ஆடுதுறை 38, ஆடுதுறை 39, ஆடுதுறை 46, கோ 43, கோ 50, சுவர்ணா சப் ஆகியவற்றை பயன்படுத்தலாம், எனவும் வேளாண் துறையினர் பரிந்துரை செய்தனர். தஞ்சாவூர் மாவட்டத்தில், 90 ஆயிரம் லட்சம் ஹெக்டரில் சம்பா சாகுபடி நடந்து வருகிறது. இதில், 20 ஆயிரம் ஹெக்டேர் மட்டுமே நீண்ட கால விதை நெல் ரகங்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மீதுள்ள நிலத்தில், மத்திய நெல் ரகங்களை விவசாயிகள் நடவு செய்துள்ளனர்.இது குறித்து மூத்த வேளாண் வல்லுநர்

பழனியப்பன் கூறியதாவது: நீண்ட கால விதை நெல் ரகத்தை, ஆகஸ்ட் மாதத்துக்குள் விதைத்தால் தான் வடகிழக்குப் பருவ மழையில், பாதிப்பு ஏற்படாமல், அதிக மகசூலை பெற முடியும். இனிமேல் விதைத்தால், வடகிழக்குப் பருவ மழை காலமான அக்டோபர், நவம்பர் மாதத்தில் பூ பூக்கும். அப்போது, தொடர் மழை பெய்தால், பூக்கள் கொட்டி மகசூல் பாதிக்க வாய்ப்பு இருக்கிறது. எனவே, மத்திய கால விதை நெல் ரகங்களைப் பயன்படுத்தினால் தான் நல்ல மகசூல் கிடைக்கும். மேலும், மத்திய கால விதை நெல் ரகங்கள், வட கிழக்குப் பருவ மழை வெள்ளத்தில் பயிர்கள் மூழ்கினாலும் பாதிப்பு ஏற்படாது. தாழ்வான பகுதியிலும் மத்திய கால விதை நெல் ரகங்களே சிறந்தது. எனவே, இந்த விதை நெல் ரகங்கள் பரிந்துரை செய்யப்படுகிறது. இவ்வாறு தெரிவித்தார்.

## <u>ராமநாதபுரத்திற்கு கைகொடுத்த மருதாநதி, மஞ்சளாறு உபரி நீர்</u>

வத்தலக்குண்டு : மருதாநதி, மஞ்சளாறு அணைகளின் உபரி நீர் ராமநாதபுரம் விவசாயிகளுக்கு கைகொடுத்த நிலையில் நிலக்கோட்டை கண்மாய்கள் நிரம்பவில்லை. வடகிழக்கு பருவமழை துவங்குவதற்கு முன்பே பரவலாக மழை பெய்யத் துவங்கியது. இதனால் வத்தலக்குண்டு, நிலக்கோட்டை ஒன்றியங்களில் உள்ள கண்மாய்களின் நீர் ஆதாரமான அய்யம்பாளையம் மருதாநதி, தேவதானப்பட்டி மஞ்சளாறு, ஆத்தூர் காமராஜர் அணைகள் நிரம்பின. அதிகமான மழை பெய்ததால் மஞ்சளாறு பாசனப்பகுதி கண்மாய்கள் வறண்டு கிடந்தன. திடீர் மழையால் மஞ்சளாறு, மருதாநதி அணைகளில் இருந்து வெளியேறிய 19920 கன அடி நீரில், கண்மாய்களுக்கு 2000 கன அடி நீரைத் தவிர 17920 ஆயிரம் கன அடி தண்ணீர் வைகை ஆறு மூலம் ராமநாதபுரத்திற்குச் சென்றது. இதனால் ராமநாதபுரம் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். அதே நேரத்தில் நிலக்கோட்டை பகுதி கண்மாய்கள் காய்ந்து கிடக்கினறன.

இது குறித்து பொதுப்பணித்துறை அதிகாரிகள் கூறியதாவது, ""மழை அளவு அதிகமானதால் கண்மாய்க்குச் செல்லும் வாய்க்காலில் நீரை திருப்ப முடியாது. கரை வலுவிழந்து நீரின் வேகத்தால் வாய்க்கால் உடைந்து விடும். இதனால் ஆற்றில் திறந்து விடப்பட்டது. தொடர்ந்து மழை பெய்தால் பத்து நாட்களில் நிலக்கோட்டை தாலுகாவில் உள்ள அனைத்து கண்மாய்களும் நிரம்பி விடும்'' என்றனர்.

**குமரியில் 1300 குளங்கள் நிரம்பியது; திற்பரப்பில் நீர்வரத்து அதிகரிப்பு**

நாகர்கோவில் : குமரி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை கொட்டித் தீர்த்தது. அக்டோபர் மாதத்தில் இயல்பாக பெய்ய வேண்டிய மழை அளவை காட்டிலும் இந்த ஆண்டு அதிக அளவு மழை பதிவாகி உள்ளது. கடந்த 2 நாட்களாக மழை குறைந்தாலும், கோதையாற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து வருவதால் திற்பரப்பு அருவியில் வெள்ளம் ஆர்ப்பரித்து கொட்டுகிறது.திற்பரப்பு அருவியில் ஏற்கனவே கடந்த வாரம் அதிகளவு தண்ணீர் கொட்டியதால் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டிருந்தது. தற்போது தண்ணீர் விழுவது குறைந்ததால் அருவியில் குளிப்பதற்கான தடை நீக்கப்பட்டது. சுற்றுலா பயணிகள் திரண்டு ஆனந்த குளியலிட்டு வருகிறார்கள்.பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் 44.30 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 435 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. பெருஞ்சாணி அணை நீர்மட்டம் 69.60 அடியாக இருந்தது.அணைக்கு வினாடிக்கு 480 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையில் இருந்து 700 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. அணையில் இருந்து வெளியேற்றப்படும் தண்ணீர் சாகுபடிக்கு ஏற்றவாறு சானல்களில் ஷிப்ட் முறையில் திறந்து விடப்பட்டு வருகிறது.சிற்றாறு-1 அணை நீர்மட்டம் 16.20 அடியாக இருந்தது. அணைக்கு 179 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து 200 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

மாவட்டத்தில் உள்ள 1,300-க்கும் மேற்பட்ட பாசன குளங்கள் நிரம்பி உள்ளது.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### தனியார் நிறுவனங்களின் பால் விலை மீண்டும் லிட்டருக்கு ரூ.4 உயர்வு



ஆந்திராவில் இருந்து தமிழத்திற்கு வரும் தனியார் நிறுவனங்களின் பால் விலை மீண்டும் லிட்டருக்கு ரூ.4 அதிகரித்துள்ளது. ஆவின் பால் விலை கடந்த 1ம் தேதி முதல் லிட்டருக்கு ரூ.10 உயர்த்தப்பட்ட நிலையில், தனியார் நிறுவனங்களும் பால் விலையை உயர்த்தி வருகின்றன. ஆந்திராவில் இருந்து தமிழகத்திற்கு பால் விநியோகிக்கும் 4 நிறுவனங்கள் கடந்த மாதம் லிட்டருக்கு ரூ.2 உயர்த்திய நிலையில் தற்போது மீண்டும் அந்நிறுவனங்களின் பால் விலை லிட்டருக்கு ரூ.4 அதிகரித்துள்ளது. பால் விலை மற்றுமின்றி தயிர் பாக்கெட்டின் விளையும் அதிரடியாக உயர்த்தப்பட்டுள்ளது. 1கிலோ தயிரின் விலையில் 12ரூபாயும், கப் தயிர் விலையில் 20 ரூபாயும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த விலை உயர்வு இன்று முதல் நடைமுறைக்கு வந்துள்ளது மக்களை கடும் அதிர்ப்தி அடைய செய்துள்ளது. கடந்த ஜனவரி முதல் 4 முறை பால் விலையை உயர்த்திய தனியார் நிறுவனங்கள், தற்போது பால் விலையை உயர்த்தி உள்ளன. தமிழகத்திற்கு நாள் தோறும் தேவை படும் 1 கோடியே 50 லட்சம் லிட்டர் பாலில், 1 கோடியே 29 லட்சம் பாலை

தனியார் நிறுவனங்களே விநியோகிப்பதால் இந்த விலை உயர்வு மக்களிடையே கடும் பாதிப்பு ஏற்படுத்தும் என்பது குறிப்பிடத்தக்கது.

**<u>வெங்காயம் கிலோ ரூ.16க்கு விற்பனை</u>**



வேலூர்: வெளிமாநிலத்தில் இருந்து வரும் வரத்து அதிகரிப்பால் வேலூரில் வெங்காயம் விலை சரிந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர். வேலூர் நேதாஜி மார்க்கெட்டுக்கு வெங்காயம் வரத்து தற்போது அதிகரித்து அதன் விலை சரிந்துள்ளது. இதுகுறித்து வியாபாரிகள் கூறுகையில், 'வெளிமாநிலங்களில் வெங்காயம் விளைச்சல் வெகுவாக அதிகரித்து, வேலூர் மார்க்கெட்டிற்கு வந்து கொண்டு இருக்கிறது. அதனால், அதன் விலை குறைந்துள்ளது. கடந்த வாரம் மார்கெட்டில் வெங்காயம் மொத்த கொள்முதல் செய்பவர்கள் 50 கிலோ மூட்டையை ரூ.1,300க்கு வாங்கி சென்றனர். தற்போது 50 கிலோ மூட்டை வெங்காயம் ரூ.800க்கு விற்பனை செய்யப்படுகிறது. கடந்த வாரம் கிலோ ரூ.22 முதல் ரூ.24 வரை விற்ற வெங்காயம், தற்போது ரூ.16 முதல் ரூ.18 வரை விற்கப்படுகிறது. ஆனால் மற்ற காய்கறிகளின் விலை குறையவில்லை' என்றனர்.

**<u>மலர் கண்காட்சியுடன் நுகர்பொருள் கண்காட்சி</u>**

கோவை, : இன்னோவேட்டிவ் டிரேடு பேர் நிறுவனம் சார்பில் கோவை சிங்காநல்லூர் வெங்கடலட்சுமி திருமண மண்டபத்தில் 'மலர் கண்காட்சி 2014' நிகழ்ச்சி நேற்று நடந்தது. காரனேஷன், க்ரிஸாந்திமம், லிஸியேந்தியம், ஸ்டேட்டைஸ், ப்ளூடெய்சி உள்ளிட்ட வெளிநாட்டு மலர்களால் வடிவமைக்கப்பட்ட இந்த கண்காட்சியில் 10 ஆயிரம் வெள்ளை ரோஜாக்களினால் அமைக்கப்பட்டிருந்த திப்புசுல்தானின்

வெள்ளைகுதிரை உருவம் பார்வையாளர்களை பெரிதும் கவர்ந்தது. காய்கறிகளால் உருவாக்கப்பட்ட விலங்குகள், பறவைகளும் இந்த கண்காட்சியில் இடம்பெற்றன. வீட்டு உபயோக பொருட்கள், அழகு மற்றும் ஆரோக்கிய சாதனங்கள், ஆடை வகைகள் உள்ளிட்ட கடைகள் வைக்கப்பட்டிருந்தன. குஜராத், ராஜஸ்தான், டெல்லி, கொல்கத்தா, கேரளா போன்ற மாநிலங்களில் இருந்து சுவையான உணவு வகைகள் விற்பனை செய்யப்பட்டன. நேற்று தொடங்கிய இந்த கண்காட்சியானது, நாளை வரை நடக்கிறது. காலை 10 மணி முதல் இரவு 8.30 மணி வரை பார்வையாளர்கள் கண்டு செல்லலாம்.

**<u>தொடர் மழையால் தேன்கனிக்கோட்டையில் காய்கறிகள் விலை உயர்வு</u>**

தேன்கனிக்கோட்டை, : தேன்கனிக்கோட்டையில் தொடர் மழையால் முட்டை கோஸ், காலிபிளவர் உள்ளிட்ட காய்கறிகளின் விலை கணிசமாக உயர்ந்தன. கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டையில் கடந்த இரு வாரங்களாக தொடர் மழை பெய்த படி இருந்தது. இதனால் ஏரி குளங்களுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்து நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்தன. இந்த தொடர் மழை யால் முட்டைகோஸ், காலிபிளவர் மற்றும் காய்கறி தோட்டங்களில் ஈரப்பதம் அதிகரித்து அழுகியதால் விளைச்சல் பாதிக்கப்பட்டது. இதனால் காய்கறி மார்கெட், உழவர் சந்தைக்கு முட்டை கோஸ், காலிபிளவர் வரத்து குறைந்துள்ளது. இதன் காரணமாக விலை உயர்ந்துள்ளது. கடந்த வாரங்களில் தேன்கனிக் கோட்டை உழவர் சந் தையில் கிலோ ரூ7 முதல் ரூ8 வரை விற்ற முட் � டகோஸ் தற்போது கிலோ ரூ12வரை உயர்ந்துள்ளது. அதே போல் பீன்ஸ், கேரட், உருளைகிழங்கு, பீட்ரூட், கத்தரிக்காய் உள்ளிட்ட காய்கறிகளின் விலைகளும் கணிசமாக உயர்ந்துள்ளது.

## துறையூரில் 12ம் தேதி சின்ன வெங்காயம் மறைமுக ஏலம்

திருச்சி, : துறையூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் வரும் 12ம்தேதி சின்ன வெங்காயம் மறைமுக ஏலம் நடைபெற உள்ளது. திருச்சி வேளாண் விற் பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பில் துறையூரில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் இயங்கி வருகிறது. இங்கு சின்ன வெங்காயம் மறைமுக ஏலம் வரும் 12ம் தேதி (புதன்கிழமை) நடைபெற உள்ளது. திருச்சி மாவட்டம், துறையூர், உப்பிலியபுரம், தா.பேட்டை உள்ளிட்ட வட்டாரங்களில் சின்ன வெங்காயம் சாகுபடி செய்து இருப்பில் வைத்துள்ள விவசாயிகள், தங்களிடம் உள்ள சின்ன வெங்காயத்தை துறையூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்துக்கு கொண்டுவந்து மறைமுக ஏலத்தில் பங்கேற்கலாம். இங்கு சின்ன வெங்காயத்துக்கு நல்ல விலை பெறுவதோடு எந்தவித கமிஷனுமின்றி உடனுக்குடன் பணத்தை பெற்றுக் கொள்ளலாம். எனவே, சின்ன வெங்காய விவசாயிகள் அனைவரும் தவறாமல் இந்த பொது ஏலத்தில் பங்கேற்று பயன்பெறலாம் என வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## திருச்செந்துறை வணிக வளாகத்தில் நாளைவாழைத்தார் பொது ஏலம் ஒரு மாதத்திற்கு 60 பைசா...

திருச்சி, : திருச்சி வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை சார்பில் ஸ்ரீரங்கம் திருச்செந்துறையில் இயங்கி வரும் ஒருங்கிணைந்த வாழை வணிக வளாகத்தில் வாழைத்தார் 15வது வாரம் பொது ஏலம் நாளை 11ம் தேதி (செவ்வாய்) காலை 11 முதல் மதியம் 1 மணி வரை நடைபெறு கிறது. இந்த பொது ஏலம் மூலம் விவசாயிகள் நல்ல விலை பெறுவதோடு எந்தவித கமிஷனுமின்றி அவர்களுக்கு உடனுக்குடன் பணம் பட்டு வாடா செய்யப்படுகிறது. எனவே திருச்சி மாவட்டத்தில் அந்தநல்லூர், மணிகண்டம், திருவெறும்பூர், லால்குடி, மண்ணச்சநல்லூர், முசிறி,

தொட்டியம் வட்டாரங்களில் வாழை சாகுபடி செய்து தற்போது அறுவடை செய்து கொண்டிருக்கும் வாழை விவசாயிகள் மட்டுமல்லாமல் டெல்டா மாவட்ட விவசாயிகளும் அறுவடை செய்துள்ள வாழைத்தார் களை திருச்செந்துறை ஒருங்கிணைந்த வாழை வணிக வளாகத்துக்கு கொண்டு வந்து பொது ஏலத்தில் கலந்துகொண்டு தாங்கள் உற்பத்தி செய்த வாழைத்தார்களுக்கு நல்ல விலை பெற்று பயன் அடை யலாம். மேலும் நல்ல தரமான வாழைத்தார்களுக்கு நல்ல விலை கிடைத்து வருகிறது. எனவே இந்த பொது ஏலத்தில் வாழைத்தார்களை ஏலம் எடுக்க வியாபாரிகளும் கலந்து கொள்ளலாம் என கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் இவ்வாழை வணிக வளாகத்தில் அமைந்துள்ள குளிர்பதன கிட்டங்கியில் வாழையை சேமித்து வைக்க குறைந்த கட்டணமே வசூலிக்கப்படுகிறது. கிலோ ஒன்றிற்கு ஒரு மாதத்திற்கு **60** பைசா மட்டுமே விவசாயிகள் மற்றும் வியாபாரிகளிடமிருந்து வசூலிக்கப்படுகிறது.

## <u>மேட்டூரில் இருந்து திறக்கப்பட்ட 8 ஆயிரம் கன அடி நீர் திருச்சியை கடந்தது</u>

திருச்சி, : மேட்டூர் அணையில் இருந்து திறந்து விடப்பட்ட 8ஆயிரம் கனஅடி நீர் நேற்று திருச்சியை கடந்தது. கம்பரசம் பேட்டை தடுப்பணை யில் கரைபுரண்டு ஓடிய தண்ணீரில் மக்கள் குதூகலத் துடன் கொண்டாடி னர். காவிரி டெல்டா மாவட் டங்களில் பலத்த மழை பெய்ததை தொடர்ந்து கடந்த மாதம் 23ம் தேதி முதல் மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கு திறக்கப்படும் தண்ணீர் முற்றிலுமாக நிறுத்தப்பட்டது. கடந்த ஒரு வாரமாக மழை பெய்யவில்லை. அதே நேரத் தில் வெயிலும் அடிக்கத் தொடங்கி விட்டது. இதனால் டெல்டாவில் சம்பா பயிர்களுக்கு தண்ணீர் தேவை ஏற்பட்டதால் கடந்த 6ம் தேதி மேட்டூர் அணையில் இருந்து டெல்டாவுக்கு வினாடிக்கு 8,800 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டது. இந்த தண்ணீர் 8ம் தேதி காலை மாயனூர் வந்தடைந் தது. நேற்று முன்தினம் இரவு முக்கொம்பு

தடுப்பணைக்கு வந்த காவிரி நீர், நேற்று பிற்பகல் திருச்சி கம்பரசம் பேட்டை தடுப்பணைக்கு வந்தது. நேற்று விடுமுறை என்பதால் கம்பரசம் பேட்டை தடுப்பணையில் ஏராளமான வெளியூர் மற்றும் உள்ளூர் சுற்றுலாபயணிகள் குவிந் தனர். இதனை பார்வையிட்டு குதூகல மடைந்தனர்.இதில் நேற்று மாலை ஸ்ரீரங்கத்தை கடந்து சென்ற காவிரிநீர், இன்று அதிகாலைக் குள் கல்லணை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேட்டூர் அணையின் நீர்மட்டம் கடந்த 23ம்தேதி அணை மூடப்பட்டபோது 91.40அடியாக இருந்த அணையின் நீர்மட்டம் 103.41அடியானது. நேற்று காலை திடீரென 103.15 அடியாக குறைந்தது. தற்போது நீர் இருப்பு 68.98 டிஎம்சி.

## <u>நாளை முதல் முகூர்த்த தினம்பூக்களின் விலை இன்று 2 மடங்கு உயருகிறது</u>

திருச்சி, : திருச்சியில் கிலோ மல்லிகை ரூ.350க்கும், கனகாம்பரம் ரூ.600க்கும் நேற்று விற்கப்பட்டது. நாளை முதல் முகூர்த்த தினத்தையொட்டி இன்று முதல் மேலும் பூ விலை 2 மடங்கு உயர்கிறது. திருச்சி மாவட்டத்தில் மண்ணச்சநல்லூர், சமயபுரம், மணப்பாறை, துறையூர், கோப்பு, குழுமணி உள் ளிட்ட பகுதிகளில் விவசாயிகள் அதிகளவில் பூ சாகுபடி செய்கின்றனர். இங்கு உற்பத்தியாகும் பூக்களை விவசாயிகள் ஸ்ரீரங்கம், காந்தி மார்க்கெட் மொத்த வியாபாரிகளிடம் விற்கின்றனர். பின்னர் இங்கிருந்து வெளிமாநிலங்கள், வெளி மாவட்டங்கள், திருச்சி மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளுக்கு பூக்கள் அனுப்பப்பட்டு வருகிறது. கடந்த மாதம் ஸ்ரீரங்கம் மற்றும் காந்தி மார்க்கெட்களில் கடும் சரிவில் இருந்த பூ விலை தொடர்ந்து ஏறுமுகத்தில் இருந்து வருகிறது. கிலோ ரூ.80க்கு விற்ற முல்லை கிலோ ரூ.400க்கும், ரூ.80க்கு விற்ற பெங்களூர் மல்லி ரூ.400க்கும், ரூ.40க்கு விற்ற மல்லிகை ரூ.350க்கும், ரூ.400க்கு விற்ற கனகாம்பரம் ரூ.600க்கும், ரூ.20க்கு விற்ற

சாமந்தி ரூ.60க்கும், ரூ.20க்கு விற்ற நாட்டு சம்மங்கி ரூ.80க்கும், ரூ.50க்கு விற்ற விருச்சி ரூ.60க்கும், ரூ.20க்கு விற்ற ஹைப்ரீடு சம்மங்கி ரூ.70க்கும், ரூ.50க்கு விற்ற பன்னீர்ரோஸ் ரூ.120க்கும், ரூ.100க்கு விற்ற பட்டன் ரோஸ் ரூ.120க்கும், ரூ.40க்கு விற்ற ரெட்ரோஸ் ரூ.60க் கும், ரூ.30க்கு விற்ற கேந்தி ரூ.50க்கும், ரூ.10க்கு விற்ற ஊட்டி ரோஸ் ரூ.30க்கும், ரூ.20க்கு விற்ற வாடாமல்லி ரூ.30க்கும், ரூ.30க்கு பைவ் ஸ்டார் ரூ.60க்கும், ரூ.20க்கு விற்ற கோழிக்கொண்டை ரூ.30க்கும் நேற்று விற்கப்பட்டது. இதில் ஒரு சில பூக்கள் மட்டும் விலை குறைந்துள்ளது. கிலோ ரூ.320க்கு விற்ற ஜாதிப்பூ ரூ.120க்கும், ரூ.150க்கு விற்ற அரளி ரூ.120க்கும் விற்கப்பட்டது. ஸ்ரீரங்கம் மொத்த வியாபாரி முனீஸ்வரன் கூறுகையில், திருச்சி மாவட்டத்தில் தொடர் பனிமூட்டத் தால் பூக்கள் வரத்து முற்றிலும் குறைந்துள்ளது. மக்கள் தேவையில்லாததால் மல்லி, முல்லை, ஜாதி உள்ளிட்ட பூ விலை பல மடங்கு உயர்ந்துள்ளது. நாளை (9ம்தேதி) முதல் நல்ல முகூர்த்தம் உள்ளது. இதனால் பூ விலை இன்று (8ம்தேதி) முதல் மேலும் 2 மடங்கு உயரக்கூடும் தவிர குறைய வாய்ப்பு இல்லை என தெரிவித்தார்.

## <u>திருவாரூர் மாவட்டத்தில் தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தில் பயிர் காப்பீடு செய்ய கலெக்டர் அழைப்பு</u>

திருவாரூர்,: திருவாரூர் மாவட்ட விவசாயிகள் தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தில் பயிர் காப்பீடு செய்ய வரும் 15ம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும். இது குறித்து கலெக்டர் மதிவாணன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது; தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தின் கீழ் திருவாரூர் மாவட்ட விவசாயிகள் பயிர் காப்பீடு செய்திட, கடன் பெறாத விவசாயிகள் வரும் 15ம் தேதிக்குள்ளும், கடன் பெற்ற விவசாயிகள் வரும் 30ம் தேதிக்குள்ளும் விண்ணப்பிக்க வேண்டும். வங்கிகளில் கடன் பெற்ற விவசாயிகள் ஏக்கர் ஒன்றுக்கு ரூ.12

ஆயிரத்து 800க்கு காப்பீடு செய்ய பிரிமியம் கட்டணமாக ரூ.128 செலுத்த வேண்டும். இதில் 50 சதவீத மானியத்தை அரசு செலுத்தும். மேலும் கடன் பெறாத விவசாயிகள் ரூ.115 பிரிமிய கட்டணம் செலுத்த வேண்டும். இவர்களில் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 55 சதவீத கட்டணம் அரசு மான்ய கட்டணமாக செலுத்தப்படும். இதை தவிர கடன் பெறாத விவசாயிகள் ஏக்கர் ஒன்றுக்கு கூடுதலாக ரூ.11 ஆயிரத்து 200க்கு காப்பீடு செய்ய கூடுதல் பிரிமியம் கட்டணமாக ரூ.2 ஆயிரத்து 688 செலுத்த வேண்டும். எனவே கடன் பெறாத விவசாயிகள் வரும் 15ம் தேதிக்குள்ளும், கடன் பெற்ற விவசாயிகள் 30ம் தேதிக்குள்ளும் தங்களது பிரிமிய கட்டணத்தை அருகில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் செலுத்தி பயிர் காப்பீட்டு திட்டத்தில் சேர்ந்து பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு கலெக்டர் மதிவாணன் தெரிவித்துள்ளார்.

## <u>நெல் கொள்முதல் பணம் வங்கிகளில் வரவு வைப்பு வங்கி கணக்கு துவங்க விவசாயிகளுக்கு அறிவுறுத்தல்</u>

திருவாரூர், : திருவாரூர் மாவட்டத்தில் அரசு நேரடி கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளுக்கு உரிய தொகை வங்கியில் நேரடியாக வரவு வைக்கப்பட உள்ளதால் விவசாயிகள் அனைவரும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் கணக்குகளை துவங்குமாறு கலெக்டர் மதிவாணன் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது: திருவாரூர் மாவட்டத்தில் நடப்பு **2014-15** ஆண்டிற்கான கே.எம்.எஸ் பருவத்திற்கு அரசு நேரடி கொள்முதல் நிலையங்கள் இது வரை மாவட்டத்தில் **52** இடங்களில் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இந்த கொள்முதல் நிலையங்கள் மட்டுமின்றி வரும் காலங்களில் மேலும் திறக்கப்படும் அரசு கொள்முதல் நிலையங்கள் மூலம் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் நெல்லுக்கு உரிய தொகை இ.சி.எஸ் எனப்படும் எலக்ட்ராணிக் கிளியரிங் சிஸ்டம் மூலம் விவசாயிகளின் வங்கி கணக்கில் நேரடியாக வரவு

வைக்கும் முறை அமல்படுத்தப்பட்டுள்ளது. எனவே இந்த முறையில் தொகையினை பெறுவதற்கு விவசாயிகள் அனைவரும் தாங்கள் வசித்து வரும் பகுதிகளுக்கு அருகில் உள்ள பாரத ஸ்டேட் வங்கி அல்லது ஏதாவது ஒரு தேசியமயமாக்கப்பட்ட வங்கி கிளைகளில் உடனடியாக கணக்கினை துவங்க வேண் டும். இவ்வாறு கலெக்டர் தெரிவித்துள்ளார்.

## வேளாண்மையில் வளம் காண நீர் சேமிப்பில் கவனம் செலுத்தவேண்டும் மானாவாரி வேளாண் விஞ்ஞானிகள் ஆலோசனை

காரைக்குடி, :சிவகங்கை மாவட்டத்தில் வேளாண்மையில் வளம் காண வேண்டும் என்றால் நீர் சேமிப்பில் விவசாயிகள் கவனம் செலுத்த வேண்டும் என செட்டிநாடு மானா வாரி ஆராய்ச்சிநிலைய விஞ்ஞானிகள் ஆலோ சனை தெரிவித்துள்ளனர். சிவங்ககை மாவட்டத்தில 80000 எக்டேர் பரப்பளவில் நெல் முதன்மை சாகுபடியாக பயிரிடப்படுகிறது. இதில் 21 சதவீதம் இறவை நடவு பயிராகவும், 50 சதவீதம் நேரடி விதைப்புக்கு பின் இறவை பயிராகவும், 19 சதவீதம் நேரடி மானாவாரி விதைப்பு பயிராகவும் பயிரிடப்படுகிறது. 60 சதவீதம் நெல் சாகுபடி கண்மாய் பாசனத்தை மட்டும் பயன்படுத்தி விவசாயம் செய்யப்படுகிறது. இதில் திருப்பத்தூரில் 920, காளையார் கோவில் 451, கல்லல் 348, சாக்கோட்டை 326, எஸ்.புதூர் 319, மற்ற வட்டாரத்தில் 200 முதல் 233 என மாவட்டம் முழுவதும் 4681 கண்மாய்கள் உள்ளன. மாவட்டத்தில் உள்ள 13 ஒன்றியங்களில் கடந்த செப்டம்பர் மாதம் 1354 மி.மீட்டரும், அக்டோபர் மாதம் 20ம் தேதி வரை 1086 மி.மீ மழையும் பெய்துள்ளன. கண்மாய்களே மாவட்டத்தில் வரப்பிரசாதமாக உள்ளன. செப்டம்பர் கடைசி மற்றும் தற்போது பெய்து வரும் நல்ல மழையால் மாவட்டத்தில் உள்ள கண்மாய்களில் நீர் நிரம்பி வருகிறது. சில கண்மாய்கல் ஆக்கிரமிப்பினால் நீர் நிரம்பாமல் உள்ளன. இந்நேரத்தில் நீர் சேமிப்பில் கவனம் செலுத்தினால் வேளாண்மையில் வளம் காணலாம் என செட்டிநாடு மானாவாரி வேளாண்மை ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இது குறித்து ஆராய்ச்சி நிலைய தலைவர்

சுவாமிநாதன், உதவி பேராசிரியர்கள் கண்ணன், பரமசிவன் கூறுகையில், மாவட் டத்தில பெரும்பாலான இடங்களில் நடவு மற்றும் விதைப்பு செய்யப்பட்டும், சில இடங்களில் நடவும் நடந்து வருகிறது. எனவே விவாசயத்திற்கு விதைப்பு மற்றும் நடவுப் பயிர்களுக்கு தற்போது பெய்கின்ற மழையே போதுமானது. இதைப் பயன்படுத்தி களைஎடுத்தல் மற்றும் உரமிடுதலை முடிக்க வேண்டும். நடவு செய்கின்றவர்கள் மழையைப் பயன்பத்தி நடவேண்டும். கண்மாயில் உள்ள நீரை பயன்படுத்தாமல் அல்லது சிக்கனமாக பயன்படுத்தினால், வடகிழக்கு பருவமழையில் வருகின்ற மழை நீரை சேமித்து வைத்து வறட்சி வருகின்ற போது நீர் பாய்ச்சி பயிரை காப்பாற்றலாம். கண்மாய் நீரை வீணாக்காமல், சிக்கனமாக பயிருக்கு தேவையான அளவு நீரை, தேவைப்படும் போது பாய்ச்ச வேண்டும். இதைத் தவிர கால்வாய்கள் சுத்தமாகவும், மழைநீர் வரத்துகளை பராமரித்தும் வைத்துக் கொள்ள வேண்டும். மழை காலங்களில் மடைகளை அடைத்து வைப்பது மிகவும் முக்கியமானதாகும். மாவட்டத்தில் நல்ல மழை பெய்து இருப்பதால் இனி வடகிழக்கு பருவமழை நன்றாக பெய்வதற்கு வாய்ப்பு இருப்பதால் நீரை சரியான முறையில் சேமித்து, தேவையான அளவு பயன்படுத்தி நெல் உற்பத்தியை அதிகரிக்கலாம் என்றனர்

## திருச்செங்கோட்டில் 2200 மூட்டை மஞ்சள் ரூ90 லட்சத்திற்கு விற்பனை

திருச்செங்கோடு, :திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் 2200 மூட்டை மஞ்சள் ரூ 90 லட்சத்திற்கு விற்பனையானது.நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் நேற்று மஞ்சள் ஏலம் நடந்தது. இந்த ஏலத்தில் ஆத்தூர், கெங்கவல்லி, கூகையூர், கள்ளக்குறிச்சி, பொம்மிடி, அரூர், ஜேடர்பாளையம், பரமத்திவேலூர், நாமக்கல், மேட்டூர், பூலாம்பட்டி ஆகிய பகுதிகளிலிருந்து மஞ்சள் விற்பனைக்கு வந்தது. பல்வேறு பகுதிகளில் இருந்து 30க்கும் மேற்பட்ட

வியாபாரிகள் பங்கேற்றனர்.ஏலத்தில் 2200 மூட்டை மஞ்சள் ரூ 90லட்சத்திற்கு விற்பனையானது. விரலி ரகம் குவிண்டால் ரூ 5,750 முதல் ரூ 8,199 வரை விற்பனையானது. கிழங்கு ரகம் ரூ 4,539 முதல் ரூ 6,349 வரை விலைபோனது. பனங்காளி ரகத்திற்கு ரூ8,500 முதல் ரூ12,199 வரை விலை கிடைத்தது. ஈரோடு மார்க்கெட்டை விட குவிண்டாலுக்கு ரூ600 அதிகம் கிடைத்தது.

## கொங்கணாபுரத்தில் 1500 மூட்டை நிலக்கடலை ரூ10 லட்சத்திற்கு விற்பனை

இடைப்பாடி, :கொங்கணாபுரத்தில் நடந்த ஏலத்தில் 1500 மூட்டை நிலக்கடலை ரூ10லட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டது.சேலம் மாவட்டம், இடைப்பாடி அருகே, கொங்கணாபுரத்தில் உள்ள திருச்செங்கோடு வேளாண் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று நிலக்கடலை ஏலம் நடந்தது. இடைப்பாடி மற்றும் பல்வேறு பகுதிகளில் இருந்து 1500 மூட்டை நிலக்கடலையை விவசாயிகள் கொண்டு வந்திருந்தனர். இதில் ஈரப்பதம் கொண்ட 60 கிலோ மூட்டை ரூ860முதல் ரூ975 வரை விலை போனது. உலர்ந்தது 60 கிலோ கொண்டது ரூ1050 முதல் ரூ1610 வரை விலை போனது. மொத்தம் 1500 மூட்டை நிலக்கடலை ரூ 10 லட்சத்திற்கு விற்பனையானது.

## மக்கா சோளக்கதிர் விற்பனை ஜோர்

சேலம், சேலத்தில் நடைபாதைக் கடைகளில் மக்கா சோளக் கதிர் விற்பனை ஜோராக நடந்து வருகிறது. சேலம் மாவட்டத்தில் ஆத்தூர் மற்றும் வாழப்பாடி பகுதிகளில் இருந்து மக்காச்சோளம் அதிகளவில் சேலம் மார்க்கெட்டுக்கு விற்பனைக்கு வருகிறது. இதனால் சேலம் பகுதியில் உள்ள நடை பாதைக் கடைகளில் மக்காச்சோளக் கதிர் விற்பனை மும்முரமாக நடந்து வருகிறது. கடந்த சில நாட்களாக மக்காச் சோளம் வரத்து 50 சதவீதம் வரை மார்க்கெட்டுக்கு அதிகரித்துள்ளது.

மொத்த வியாபாரிகளிடம் மக்காசோளக் கதிரை வாங்கி நடை பாதை வியாபாரிகள் கூறு கட்டி விற்பனை செய்து வருகின்றனர். வியாபாரிகள் கூறுகையில், “மொத்த வியாபாரிகளிடம் 100 கதிர்களை ரூ 250முதல் ரூ 300 வரை தரத்துக்கு ஏற்றாற்போல் வாங்குகிறோம். 4 முதல் 5 கதிர்களைக் கொண்ட ஒரு கூறுதி20க்கு விற்பனை செய்கிறோம்,” என்றனர்.

**<u>தொடுதிரை கணினியை பயன்படுத்தி தொழில் நுட்பங்களை பெறலாம் விவசாயிகளுக்கு அதிகாரி யோசனை</u>**

புதுக்கோட்டை, : புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள தொடுதிரை கணினியினைப் பயன்படுத்தி தங்களுக்குத் தேவையான தொழில்நுட்பங்களை செயல்விளக்கத்துடன் கண்டு விவசாயிகள் பயன்பெறலாம் என வேளாண்மை இணை இயக்குநர் ஷாஜஹான் தகவல் தெரிவித்துள்ளார். புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான் மலை உழவர் பயிற்சி நிலையத்தின் சார்பில் கிராம அளவிலான விவசாயிகள் பயிற்சி வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்றது. பயிற்சிக்கு புதுக் கோட்டை வேளாண்மை இணை இயக்குநர் ஷாஜஹான் தலைமை வகித்து பயிற்சியை துவக்கி வைத்து பேசினார். அப்போது, விவசாயிகள் புதுக்கோட்டை மாவட்டத்தில் புதுக்கோட்டை, அன்னவாசல், திருவரங்குளம், திருமயம் மற்றும் அறந்தாங்கி வட்டாரங்களில் வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள ‘டச் ஸ்கிரீன்‘ எனப்படும் தொடு திரைக் கணினியினைப் பயன்படுத்தி தங்களுக்குத் தேவையான தொழில் நுட்பங்களைச் செயல்விளக்கத்துடன் கண்டு பயன்பெறவேண்டும். இத்தொடுதிரைக் கணினியில் வேளாண்மை சார்ந்த அனைத்துப் பயிர்கள் குறித்தும் சாகுபடித் தொழில்நுட்பங்கள் செயல்விளக்கமாகக் காணொளி மூலம் விவசாயிகள் எளிதில் புரிந்துகொள்ளும் வண் ணம் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதனைப் பயன்படுத்தித் தொழில் நுட்பங்களை அறிந்து கொண்டு மகசூல் கூடுதலாக பெறலாம் என்றார். பயிற்சியில்

குடுமியான் மலை உழவர் பயிற்சி நிலையத் துணை இயக்குநர் சாந்தி தோட்டக்கலைப் பயிர்களைப் பருவமறிந்து, சந்தை நிலவரமறிந்து தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி சாகுபடி செய்வது குறித்தும், உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை அலுவலர் ராஜசேகரன் சம்பா நெற்பயிரில் பச்சை வண்ண அட்டையைப் பயன்படுத்தி உரமேலாண்மை செய்வது குறித்தும், கத்திரிப் பயிரில் பூச்சித் தாக்குதல் மற்றும் அதனைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்தும், புதுக்கோட்டை வேளாண்மை உதவி இயக்குநர் ரவிச்சந்திரன் தொடுதிரைக் கணினியைப் பயன்படுத்தித் தொழில்நுட்பங்களை அறிந்துகொள்ளும் முறைகளையும் விவசாயிகளுக்குப் பயிற்சியளித்தனர். மேலும் குடுமியான் மலை தோட்டக்கலைப் பண்ணை அலுவலர் நடராஜன் பயிற்சியில் கலந்துகொண்டு காய்கறி சாகுபடி குறித்தும், அதனை சந்தைப்படுத்துதல் குறித்தும் விளக்கமாக பயிற்சி அளித்தார். புதுக்கோட்டை வேளாண்மை அலுவலர்கள் பூபதிகண்ணன் மற்றும் மதியழகன் வேளாண்மை விரிவாக்க மையத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்களின் விவரங்களையும் நெற்பயிரைத் தாக்கும் பூச்சி, நோய் குறித்தும் எடுத்துக்கூறினர். பயிற்சியில் கலந்துகொண்ட விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி கையேடுகள் மற்றும் ஊக்கத்தொகை வழங்கப்பட்டன. பயிற்சியில் புதுக் கோட்டை தாலு காவை சேர்ந்த வாகவாசல், திருமலைராயசமுத்திரம் பண்ணை மகளிர்க்குழு விவசாயிகள் கலந்துகொண்டனர். முடிவில் உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை அலுவலர் ராஜசேகரன் நன்றி கூறினார்.

## <u>நெற்பயிரில் குருத்துப்பூச்சி கட்டுப்படுத்துவது எப்படி? வேளாண் அதிகாரி வழிகாட்டல்</u>

அன்னவாசல், : புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்போது நடவு செய்யப்பட்டுள்ள சம்பா நெல் பயிரில் குருத்துப்பூச்சியின் தாக்குதலை கட்டுப்படுத்துவது எப்படி? என்பது பற்றி குடுமியான்மலை மாநில பயிற்சி நிலைய இயக்குநர் வெள்ளைச்சாமி ஆலோசனை

வழங்கியுள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், நடப்பு சம்பா பருவத்தில் நடவு செய்யப்பட்டுள்ள சம்பா மசூரி, வெள்ளைப் பொன்னி, ஆடுதுறை39, கோ50 ஆகிய நெற்பயிர்களில் குருத்துப்பூச்சியின் தாக்குதல் ஆங்காங்கே தென்படுகிறது. குருத்துப்பூச்சியினால் தாக்கப்பட்ட நெற்பயிர்களின் நடுக்குருத்து வாடி காய்ந்து இருக்கும். இதனை பிடித்து இழுத்தால் கையோடு வந்து விடும். பயிரின் வளர்ச்சி பருவத்தில் 10 சதவீத நடுக்குருத்துக்கள் காய்ந்திருந்தால் மருந்து தெளித்து குருத்துப் பூச்சியைக் கட்டுப்படுத்துவது அவசியம். இல்லாவிட்டால் பெரும் மகசூல் இழப்பு ஏற்படும். குருத்துப் பூச்சியை கட்டுப்படுத்த கார்ட்டாப் ஹைட்ரோ குளோரைடு 4ஜி 7.5கிலோ அல்லது அசிபேட் 75 எஸ்பி, 400 கிராம் அல்லது பிப்ரோனில் 5எஸ்சி, 500மிலி, பைபென்திரின் 10இசி 200மிலி அல்லது தயோ மீத்தோசெம் 25டபுள்யூஜி 40 கிராம் அல்லது ட்ரைஅசோபாஸ் 40இசி 400மிலி அல்லது ப்ளூபென்டியமைடு 480 எஸ்எல் 1520 மிலி இவற்றில் ஏதாவது ஒரு மருந்தினை கைத்தெளிப்பானாக இருந்தால் 200 லிட்டர் தண்ணீரிலும், விசைத் தெளிப்பானாக இருந்தால் 60 லிட்டர் தண்ணீரிலும் கலந்து பயிர் நன்கு நனையும்படி தெளிக்க வேண்டும். இவ்வாறு அதில் குறிப்பிட்டுள்ளார்.

## <u>சம்பா நெற்பயிரில் குலைநோய் தாக்குதல் தடுக்க தொழில்நுட்ப ஆலோசனை</u>

நாகை,:தற்போது சம்பா நெற்பயிரில் ஏற்பட்டுவரும் குலைநோய் தாக்குதலை தடுக்க தொழில்நுட்ப ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. இது குறித்து சிக்கல் வேளாண்மை அறிவியல் நிலைய தலைவரும், பேராசிரிருமான முனைவர் ராஜேந்திரன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளதாவது. நாகை மாவட்டத்தில் கடந்த மாதம் பெய்த வடகிழக்கு பருவமழைக்கு பிறகு தற்போது நிலவும் தட்பவெப்ப சூழ்நிலையில் சம்பா மற்றும் தாளடி நெற்பயிரில் இலைப்பேன்,

இலைச்சிலந்தி ஒரு சில இடங்களில் தென்படுகிறது. மேலும் பாக்டீரியா இலை கருகல், குலைநோய் தோன்றவும் வாய்ப்புள்ளது. இதை நிவர்த்தி செய்ய விவசாயிகள் மேலாண்மை முறைகளை கடைப்பிடித்து நெற்பயிரை பாதுகாத்து உயர் விளைச்சல் பெறலாம். இலைப் பேனை கட்டுப்படுத்த ஏக்கருக்கு அசாடிராக்டின் 500 மி.லி, அல்லது தயாமீதாக்சாம் 100 கிராம் மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். இலைசிலந்தியை கட்டுப்படுத்த டைக்கோபால் 500 மில்லி மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். பாக்டீரியா நோய் தாக்குதலை கட்டுப்படுத்த இலைவழி மூலம் ஏக்கருக்கு பசுஞ்சாணம் 40 கிலோவை 100 லிட்டர் தண்ணீரில் கரைத்து இரவு முழுவதும் ஊறவைத்து மறுநாள் தெளிந்த நீரை வடிகட்டி அதனுடன் மேலும் 100 லிட்டர் தண்ணீர் கலந்து தெளிக்கலாம். அல்லது சூடோமோனாஸ் 500 கிராம் அல்லது கார்ப்பர் ஹைட்ராக்சைடு 400 கிராம் மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். வெள்ளநீரில் மூழ்கிய நெற்பயிர்கள் பூச்சி மற்றும் நோய்களுக்கு எளிதில் இலக்காகும். எனவே அதிகபடியான அளவு தழைச்சத்து உர ங்கள் இடுவதை தவிர்க்க வேண்டும். மேலும் பரிந்துரைக்கப்பட்ட யூரியாவை பிரித்து இட வேண்டும். மேலும் விவரங்களுக்கு நாகை மா வட்டம் சிக்கல் வேளாண். அறிவியல் நிலைய தலைவரை நேரிலோ அல்லது 04365 246266 என்ற தொலைபேசி மூலமாகவோ தொடர்பு கொண்டு அறியலாம் என நாகை மாவட்டம் சிக்கல் வேளாண்மை அறிவியல் நிலைய தலைவரும், பேராசிரிருமான முனைவர் ராஜேந்திரன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## காரைக்காலில் இலை கருகல் நோயை தாங்கி வளரும் திருச்சி-3, சம்பா மசூரி ரகம் அறிமுகம்

காரைக்கால், : காரைக் காலை அடுத்த மாதூர் வேளாண் அறிவியல் நிலையத்தில், நேற்று சம்பா பருவத்தில் புதிய ரகமான திருச்சி-3, திருந்

திய சம்பா மசூரி நெல் விதைகள் இயந்திரம் நடவு மூலம் நடவு நிலையத் தலைவர் சுரேஷ் தொடங்கி வைத்தார்.அப்போது அவர் கூறிய தாவது: வேளாண் அறிவியல் நிலையத்தில், சம்பா பருவத்தில் 2 புதிய ரகங்களை நடவு செய்துள்ளோம். திருச்சி-3 ரகமானது 2 ஏக்கர் நிலப் பரப்பிலும், சம்பா மசூரி 2 ஏக்கரிலும் பயிரிடப்பட்டுள்ளது. திருச்சி-3 ரகமானது காரைக் கால் மண்ணின் உப்புத்தன்மை யை தாங்கி வளரக்கூடிய சிறந்த ரகபயிராகும். இது 135 நாட்கள் வளரக்கூடியது. குறிப்பாக, இட்லி, தோசைக்கு சிறந்த அரிசியை இது தரும். இந்த ரக நெல்லை நடப்பாண்டு உற்பத்தி செய்து, மாவட்ட விவசாயிகளு க்கு வரும் வருடம் நல்ல விதை யை விற்பனையை நிலையம் வழங் கும். மேலும், சம்பா மசூரி ரகமானது 140 நாட் கள் வளரக்கூடியது. பாப்பட்லா பி.பி.டி ரகத்திற்கு மாற்று ரகமாக இந்த ரகத்தை அறிமுகம் செய்துள் ளோம். இது இலை கருகல் நோயை தாங்கி வளரும் பயி ராகும். காரைக்கால் மாவட்ட விவசாயிகள் இருரக நெல் ரகங்களை தங்கள் வயல்களில் இயந்திர நடவு மூலம் உற்பத்தி செய்து பயன்பெற வேண்டுகிறோம். என்றார்.

## <u>கொள்ளிடம் அருகே ரூ.100 கோடியில் தடுப்பணை கட்ட இடம் தேர்வு</u>

கொள்ளிடம், : கொள் ளிடம் அருகே ரூ.100 கோடி யில் தடுப்பணை கட்ட தேர்வு செய்யப்பட்டு ள்ள இடத்தை அமைச்சர் ஜெயபால் பார்வை யிட்டார். நாகை மாவட்டம் கொள்ளிடம் அருகே சந்தப்படுகை கிராமத்திற்கும் பெராம்பட்டு கிராமத்திற்கும் இடையே கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே 1200 மீட்டர் தூரத்திற்கு 2.2 மீட்டர் அடி உயரத்திற்கு கடல் நீர் ஆற்றுக்குள் புகுவதை தடுக்கும் விதத்தில் ரூ.100 கோடி மதிப்பீட்டில் கல்லணையிலிருந்து 152 வது தடுப்பணை கட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது. அந்த இடத்தை அமைச்சர் ஜெயபால் நேற்றுமுன்தினம் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுவதன் மூலம் கடல் நீர் உள்புகாதவாறு தடுக்க முடியும். இதனால் நிலத்தடிநீர் உவர் நீராக

மாறாது. பல ஆயிரக்கணக்கான ஏக்கர் விளைநிலங்கள் பயன்பெறும் என்று பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். கலெக்டர் முனுசாமி, மயிலாடுதுறை சப்கலெக்டர் திவ்யதர்ஷினி, எம்.பி.பாரதிமோகன், எம்.எல்.ஏ.சக்தி, மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் சந்திரசேகர், துணை தலைவர் ஜெயராமன், ஒன்றியக்குழு தலைவி மீனா, மயிலாடுதுறை காவிரி வடநிலக்கோட்ட செயற்பொறியாளர் பக்தவத்சலம், ஒன்றிய ஆணையர் சேகர், பி.டிஓ. லதா, பொதுப்பணித்துறை உதவிப்பொறியாளர்கள் மஜித், ஞானசேகரன், சிவகுருநாதன், சீர்காழி தொகுதி இணைச் செயலாளர் பாரிவள்ளல் மற்றும் பலர் உடனிருந்தனர். இதனை தொடர்ந்து கொள்ளிடம் அருகே உள்ள ஆச்சாள்புரம், ஆலாலசுந்தரம், மாதானம், வடகால் ஆகிய பகுதிகளில் மழையில் சேதமடைந்த நெற்பயிரை அமைச்சர் ஜெயபால் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அதனைத் தொடர்ந்து பழைபாளையம் கிராமத்தில் கிட்டி அணை மதகு பழுதடைந்து இருப்பதை அமைச்சர் பார்வையிட்டார்.

## பயிர்களை பாதுகாக்க விதை நேர்த்தி அவசியம் வேளாண்மைத்துறை ஆலோசனை

உத்தமபாளையம், : பயிர்களை பாதுகாக்க விதை நேர்த்தி செய்வது அவசியம் என வேளாண்துறையினர் ஆலோசனை வழங்கி உள்ளனர். குழந்தைகளுக்கு பிற்கா லத்தில் வரக்கூடிய கக்கு வான், போலியோ போன்ற நோய்கள் வராமல் தடுப்ப தற்கு தடுப்பூசிகள், சொட்டு மருந்துகள் கொடுப்பதை போலவே, பயிர்களை விதை மூலம் பரவக்கூடிய பூஞ்சான் நோய்களிலிருந்து பாதுகாப்பதற்கு விதை யுடன் பூஞ்சான மருந்து கலந்து விதை நேர்த்தி செய்திட வேண்டும். விதை மூலம் பரவும் இலைப்புள்ளி, இலைக்கருகல், இலை உறை அழுகல் மற்றும் குலை நோய் போன்ற பூஞ்சான நோய்களை தடுக்க 1 கிலோ விதைக்கு 2 கிராம் வீதம் “கார்பன்டைசிம்“ கலந்து 24 மணி நேரம்

வைத்திருந்து பின் விதைக்க வேண்டும். இல்லாவிட்டால் 1 கிலோ விதைக்கு 4 கிராம் வீதம் “டிரைக்கோ டெர்மா விருடி“ அல்லது 1 கிலோ விதைக்கு 10 கிராம் வீதம் “சூடோமோனாஸ் ப்ளாரச ன்ஸ்“ என்ற உயிரியல் பூஞ்சான மருந்தை விதைப்பத ற்கு முன் கலந்து விதைக்க வேண்டும். 1 ஏக்கர் விதை க்க தேவையான விதைக்கு விதை நேர்த்தி செய்ய 10 முதல் 20 ரூபாய் வரை செலவாகும். ஆனால், விதை நேர்த்தி செய்வதால், பயிர் வளர்ச்சி காலத்தில் நோய்கள் தாக்கி, அவற்றை கட்டுப்படுத்த மருந்திற்கு செலவு செய்ய வேண்டிய அவசியம் ஏற் படாது. நெல், சிறுதானியங் கள், பருத்தி, கரும்பு, எள் மற்றும் சூரியகாந்தி பயிர்களுக்கு விதைநேர்த்தி செய்வதற்கு 1 ஏக்கர் விதை க்கு அசோஸ் பைரில்லம் 1 பாக்கெட் ஆறிய வடிகஞ்சியில் கலந்து அதனுடன் பூஞ்சான விதை நேர்த்தி செய்த விதையை கலந்து நிழலில் 30 நிமிடம் உலர்த்தி பின்பு விதைக்க வேண்டும். நிலக்கடலை மற்றும் பயிறு வகைகளுக்கு விதை நேர்த்தி செய்வதற்கு 1 ஏக்கர் விதைக்கு “ரைசோ பியம்கல்ச்சர்“ 1 பாக்கெட் டை ஆறிய வடிகஞ்சியில் கலந்து அதனுடன் பூஞ்சான விதை நேர்த்தி செய்த விதை யை கலந்து நிழலில் 30 நிமி டம் உலர்த்தி பின் விதைக்க வேண்டும். உயிர் உர விதை நேர்த்தி செய்வதால், உயிர் உரங்கள் காற்றி லுள்ள தழை ச்சத்தை கிரகி த்து பயிருக்கு கொடுக்கும். அதனால் இளம் பயிரின் இலைகள் கரும் பச்சை நிறத் துடன் செழிப் பாக வளரும். பயிர்கள் கூடு தல் மகசூல் கொடுக்கும். இதனால் கால் பங்கு தழைச் சத்து இடுவதை குறைக்கலாம். அதன் மூலம் உரச் செல வை குறைக்கலாம். எனவே. விவசாயிகள் பூசனக் கொல் லி விதை நேர்த்தி செய்து பயிர்களை நோய்களி லிருந்து வருமுன் காக்க வேண்டும் என்று பழநி வேளாண்துறை அதிகாரி கள் தெரிவித்துள் ளனர்.

## மூன்று ஆண்டுகளுக்கு பிறகு 6ம் மைல் அணை நிரம்பியது

ராஜபாளையம், . தொடர் மழையினால், 3 ஆண்டுகளுக்கு பிறகு ராஜபாளையம் ஆறாம் மைல் அணை நிரம்பியது. இதனால், நகர

மக்களின் குடிநீர் பிரச்னை முடிவுக்கு வந்தது. ராஜபாளையம் பகுதி யில் கடந்த 3 ஆண்டுகளாக போதிய மழை இல்லாததால் கோடை காலங்க ளில் பொதுமக்கள் குடிநீருக்கு பெரிதும் அவதிப்பட்டனர். நகராட்சி குடிநீர் ஆதாரமான 6ம் மைல் குடிநீர் தேக்கத்தில், கடந்த காலங்களில் 7 முதல் 9 அடி வரை தண்ணீர் தேங்கும். இதனால், ஏப்ரல், மே மாதங்களில் அணை வறண்டு குடிநீர் பிரச்னை உருவாகும். அப்போது நகராட்சி போர்வெல் மற்றும் கிணறுகளில் தண்ணீர் எடுத்து லாரிகள் மூலம் பொதுமக்களுக்கு சப்ளை செய்யும். இந்நிலையில், நடப்பா ண்டில் கடந்த அக்டோபர் முதல் ராஜபாளையம் நகரப்பகுதி மட்டுமின்றி, மேற்கு தொடர்ச்சி மலை பகுதிகளிலும் மழை பெய்தது. கிட்டத்தட்ட 50 மி.மீ வரை மழை கொ ட்டி யது. இதனால், அய்யனார் கோயில் ஆற்றில் நீர்வரத்து அதிகரித்தது. இதனால், கடந்த ஆண்டுகளில் 7 முதல் 9 அடிவரை நிரம்பிய அணை, இந்தாண்டு 18 அடியை தொட்டது. 63 ஏக்கர் பரப்பளவில் 24 அடி உயரமுள்ள அணையில் 18 முதல் 19 அடி மட்டும் தண்ணீர் தேக்கி வைக்கப்படும். தற்போது அணையில் 18.5 அடிக்கு தண்ணீர் நிரம்பியதால் பொதுமக்கள் மகிழ்ச்சியில் உள்ளனர். இந்நிலையில், அணை யை நகராட்சித் தலைவர் தனலட்சுமி செல்வ சுப்பிரமணியராஜா, ஆணையர் (பொ) நடராஜன், அலுவலர்கள், கவுன்சிலர்கள், மா வட்ட ஜெயலலிதா பேர வை செயலாளர் செல்வ சுப்பிரமணியராஜா ஆகியோர் பார்வையிட்டனர். அப்போது நகராட்சி தலைவர், சந்தேகப்படும் கரைப் பகுதியில் மணல் மூட்டைகளை அடுக்கி, முன் எச்சரிக்கை நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். பின்னர் அவர் கூறியது: ராஜபாளையம் நகர் மக்களுக்கு குடிநீர் வழங்கும் ஆறாம்மைல் அணையில் 18.5 அடி வரை நீர்மட்டம் உயர்ந்துள்ளது. இனி தண்ணீர் பிரச்னை இருக்காது. எனவே, இனி 3 தினங்களுக்கு ஒரு முறை குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்'' என்றார்.

## காப்பீட்டு திட்டத்தில் சேர விவசாயிகளுக்கு அழைப்பு

காட்டுமன்னார்கோவில், : காட்டுமன்னார்கோவில் பகுதியில் சம்பா சாகுபடி செய்யப்பட்டுள்ளது. நடவு மற்றும் நேரடி நெல் விதைப்பு செய்யப்பட்டு நெற்பயிர் சாகுபடி தீவிரமடைந்துள்ளது. ஒவ்வொரு ஆண்டும், புயல், மழை, நோய் ஆகியவற்றின் காரணமாக நெற்பயிர் பாதிக்கப்பட்டு வருகிறது. இதை கருத்தில் கொண்டு அரசு தேசிய வேளாண்மை காப்பீட்டு திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இந்த திட்டத்தில் விவசாயிகள் பங்கு கொண்டு பயன்பெறுமாறு காட்டுமன்னார்கோவில் வேளாண்மை உதவி இயக்குநர் கனகசபை கூறியுள்ளார். பயிர் காப்பீட்டு திட்டத்தில் விவசாயிகள் காப்பீடு செய்வதால் மகசூல் இழப்பு ஈடு செய்யப்படுகிறது. இந்த திட்டத்தில் பயன்பெற கூட்டுறவு வங்கிகளில் கடன் பெறாத விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு ரூ.12 ஆயித்து 800 காப்பீட்டு தொகையாக வழங்கப்படுகிறது. இதற்கு விவசாயிகள் பிரிமீயம் தொகையான ரூ.128ம் தங்கள் பகுதியில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் செலுத்த வேண்டும். பணம் செலுத்தும் போது பயிர் செய்வதற்கான ஆதாரங்களான கணினி சிட்டா மற்றும் அடங்கல், குடும்ப அட்டை நகல், ஆகியவற்றை இணைக்க வேண்டும். இந்த காப்பீட்டு திட்டத்தில் சேருவதற்கு வரும் 15ம் தேதி கடைசி நாளாகும். எனவே அனைத்து விவசாயிகளும் இந்த திட்டத்தில் சேர்ந்து பயன்பெறுமாறு கேட்டுக் கொண்டுள்ளார். மேலும் சந்தேகங்கள் ஏற்பட்டால் அருகில் உள்ள வேளாண்மை உதவி அலுவலர்களை சந்தித்து ஆலோ சனை பெறுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

## விவசாயிகளுக்கு நுண்ணூட்ட பயிற்சி

பரமத்திவேலூர், : பயிர்களில் மகசூலை அதிகப்படுத்த நுண்ணூட்டக் கலவை உரங்களின் பங்கு இன்றியமையாததாகும். மண் வளம் மேம்படவும், பயிர் வளர்ச்சி சீராக இருக்கவும், நாம் இடும் தழை, மணி

மற்றும் சாம்பல் சத்துக்களை நுண்ணூட்டக் கலவை உரங்கள் கலந்து இட வேண்டி வேளாண் துறை அறிவுறுத்தி உள்ளது. நெல் பயிருக்கு ஒரு ஏக்கருக்கு 5 கிலோ நெல் நுண்ணூட்டத்தை, 20 கிலோ மணலுடன் கலந்து கடைசி உழவின் போது இடவேண்டும். நிலக்கடலைக்கு ஒரு ஏக்கருக்கு 5 கிலோ நிலக்கடலை நுண்ணூட்டத்தை, 20 கிலோ மணலுடன் கலந்து கடலை விதைப்பிற்கு பிறகு சீராகத் தூவ வேண்டும். பயறு வகைப் பயிர்களுக்கு, ஒரு ஏக்கருக்கு 2 கிலோ பயறுவகைப் பயிர்கள் நுண்ணூட்டத்தை, 20 கிலோ நன்கு மக்கிய தொழு உரத்துடன் நன்றாகக் கலந்து, ஒரு மாதம் நிழலில் வைத்திருந்து பின்பு இடவேண்டும். கரும்பு மகசூல் அதிகரி க்க, ஒரு ஏக்கருக்கு 20 கி லோ கரும்பு நுண்ணூட்ட த்தை, 20 கிலோ நன்கு மக்கிய தொ ழு உரத்துடன் நன்றாகக் கலந்து, ஒரு மாதம் நிழலில் வைத்திருந்து பின்பு இடவேண்டும். தென்னையில் குரும்பை உதிர்தல் மற்றும் காய்கள் சிறுத்துப் போவ தைத் தடுக்க, ஒரு மரத்துக்கு, ஒரு வருடத்துக்கு, ஒரு கிலோ தென்னை நுண்ணூட்ட த்தை, 10 கிலோ நன்கு மக் கிய தொழு உரத்துடன் நன்ற �கக் கலந்து, ஒரு மாதம் நிழ லில் வைத்திருந்து பின்பு இடவேண்டும். இதன் மூலம் தர மான, அதிக எண்ணிக்கையிலான பெரிய காய்களைப் பெறலாம். மேற்கண்ட அனை த்து நுண்ணூட்டங் களை மோகனூர் வட்டார வேள ண்மை விரிவாக்க மைய த்தில் வாங்கிப் பயன்படு த்தி, பயிர்களில் அதிக மக சூல் பெற வேண்டுமாய் வட்டார வேள ண்மை உதவி இயக்கு னர் கந்தசாமி கேட்டுக் கொ ண்டுள்ளார்.

## <u>வாழையில் வாடல் நோய் தாக்குதலை தடுக்கும் முறை</u>

பள்ளிபாளையம், : வாடல் நோய் தாக்கிய வாழைகளின் கிழங்குகளை தோண்டி அப்புறப்படுத்தும்படி வேளாண்மைத்துறையினர் யோசனை தெரிவித்துள்ளனர். பள்ளிபாளையம் வட்டாரம் களியனூர் பகுதியில் சாகுபடி செய்யப்பட்டுள்ள வாழைகளில் வாடல் நோயின் தாக்குதல் தென்படுகிறது. பூசணத்தால் ஏற்படும் இந்த நோய் ஐந்து மாதத்திற்கு

மேற்பட்ட வாழைகளை தாக்கி மகசூல் இழப்பை ஏற்படுத்தும் என பள்ளிபாளையம் தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் ராஜேந்திரன் தெரிவித்துள்ளார். இந்த நோய் தாக்கப்பட்ட வாழைமரத்தின் கீழ்மட்ட இலைகளின் ஓரங்கள் மஞ்சளாக மாறும். நோயின் தாக்குதல் முற்றும் போது காம்பு பகுதி ஒடிந்து தொங்கிவிடும். நாளடைவில் இலைகள் வாடி மரத்தின் தண்டினை சுற்றி பிளவு ஏற்பட்டு நீள வாக்கில் வெடிப்புகள் தென்படும். நோய் தாக்கப்பட்ட மரங்களை கிழங்குடன் வயலில் இருந்து அகற்றி எடுத்துவிட வேண்டும். அகற்றப்பட்ட குழிகளில் இரண்டு கிலோ சுண்ணாம்பை இடவேண்டும். கன்று நடவு செய்த மூன்று, ஐந்து, ஏழாவது மாதங்களில் வாழையின் அடிப்பாகத்தில் சிறிதளவு மண்ணை அகற்றி கிழங்கு பகுதியில் 6 செமீ ஆழத்திற்கு சாய்வாக துளையிட்டு 50 மிலி கிராம் பெவிஸ்டின் அல்லது சூடோமோனஸ் நிரம்பிய குப்பிகளை செலுத்தி, துளையினை மீண்டும் மண்கொண்டு பூசிவிட்டால் நோய் வரும் முன்னரே வாழைகளை காப்பாற்றிவிடலாம் என்று தெரிவித்தார்.

## <u>மஞ்சள் பயிரில் தீயல் நோயை கட்டுப்படுத்துவது எப்படி?</u>

பள்ளிபாளையம், :மஞ்சள் பயிரில் இலை தீயல் நோய் காணப்படுவதால் அவற்றை கிள்ளியெறிந்துவிட்டு பூச்சிக்கொல்லி மருந்து தெளிக்கும்படி வேளாண்மைத்துறையினர் யோசனை தெரிவித்துள்ளனர். பள்ளிபாளை யம் வட்டாரம் சீராம்பாளையம், செங்குட்டைபாளையம், சமயசங்கிலி ஆகிய கிராமங்களில் விவசாயிகள் பரவலாக மஞ்சள் பயிரிட்டுள்ளனர். நன்கு வளர்ந்துள்ள மஞ்சள் பயிரின் இலைகளில் தற்போது இலை தீயல் நோய் காணப்படுகிறது. மஞ்சள் இலையில் இருபக்கமும், வட்டம் மற்றும் ஒழுங்கற்ற நிலையில் பழுப்புநிற புள்ளிகள் காணப்படும். இளம் இலைகளை தாக்கும் இந்த நோய் இலையை முதிர்ச்சியடைய விடாமல் காய வைத்துவிடும். தற்போதுள்ள குளிர்ச்சியான நிலையில் ஈரப்பதம் அதிகமாக இருப்பதால் நோய் விரைந்து பரவும் தன்மை கொண்டது. நோய் தாக்கிய வயல்களில் மகசூல் குறைந்து விடும். எனவே, விவசாயிகள் மஞ்சள் வயல்களை கூர்ந்து கவனித்து வரவேண்டும்.

பழுப்பு நிற இலைகளை உடனடியாக கிள்ளி எறித்து விட வேண்டும் என பள்ளிபாளையம் தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் ராஜேந்திரன் தெரிவித்துள்ளார். நோய் தாக்கிய வயலில் பைட்டலான் என்ற மருந்தினை ஏக்கருக்கு 1250 கிராம், மேங்கோ செப் 1000 கிராம், கார்பன்டிசியம் 500 கிராம் இவற்றில் ஏதேனும் ஒன்றினை தெளித்து நோயினை கட்டுப்படுத்தலாம். நோயின் தீவிரத்தை பொறுத்து 10 முதல் 15 நாட்கள் இடைவெளியில் 2 அல்லது 3 முறை தெளிக்கலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

## வேளாண்மை பல்கலைக்கழகம் அறிமுகம் நெற்பயிரில் களைவெட்டும் இயந்திரம் கீழ்பவானி விவசாயிகளுக்கு விளக்கம்

ஈரோடு, :சமீப காலமாக விவசாய பணிகளுக்கு ஆட்கள் பற்றாக் குறை நீடிப்பதால் நவீன வேளாண் கருவிகளை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் அறிமுகம் செய்து வருகிறது. அதன்படி களை எடுக்கவும், நாற்று நடவு செய்யவும், மருந்து தெளிக்கவும் பல்வேறு புதிய கருவிகள் பயன்பாட்டிற்கு வந்துள்ளது. சமீபத்தில் வேளாண் பல்கலைக்கழகம் நெல் விசை களை எடுக்கும் இயந்திரத்தை (பேடி பவர் வீடர்) அறிமுகம் செய்துள்ளது. இந்த நெல் விசை களை எடுக்கும் இயந்திரத்தை பயன்படுத்தி மிக குறைந்த செலவில் பயிர்களுக்கு களை எடுக்கலாம் என வேளாண் பொறியியல் துறையினர் கூறுகின்றனர். இதுதொடர்பான செயல் விளக்கம் பெரியசடையம்பாளையம் கிராமத்தில் சண்முகம் என்ற விவசாயியின் தோட்டத் தில் வேளாண் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் அலுவலகம் சார் பில் நடந்தது. இந்நிகழ்ச்சியில், வே ளாண் பொறியியல் துறை பொறியாளர்கள் நெற்பயிரில் விசை களை எடுக்கும் இயந்திரத்தின் செயல்பாட்டுகள் குறித்து விவசாயிகளுக்கு செயல்விளக்கம் செய்து காட்டினர். புதிதாக அறிமுகம செய்யப்பட்டுள்ள நெல் விசை களை எடுக்கும் இயந்திரம் குறித்து வேளாண் பொறி யியல் துறை அதிகாரிகள் கூறியதாவது: நெற்பயிரில் களை எடுக்க இதுவரை ‘கோனாவீடர்’ என்ற கரு வியே

பயன்படுத்தப்பட்டு வந்தது. இதை விவசாயிகள் தான் கையால் அழுத்தி பயன்படுத்த வேண்டும். ஆனால், தற்போது புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள நெல் விசை களை எடுக்கும் இயந்திரத்தை கொண்டு 9 முதல் 11 இன்ச் இடைவெளியில் விட்டு எளிதாகவும், வேகமாகவும் களைகளை பறிக்க இயலும். இவை மோட்டாரில் இயங்குவதால் ஒரு ஏக்கருக்கு களை பறிக்க 2 லிட்டர் பெட்ரோல் மட்டுமே செல வாகும். இந்த இயந்திரத்தை வயலில் பயன்படுத்தும் போது மண்ணை நன்கு கிளறி விடுவதால் மண் இளகி விடுகிறது. இதன் மூலம் வேர் நன்கு படர்ந்து வளர்வதால் ஒரு நெற்பயிரில் அதிகமாக தூர் கட்டும். கிட்டத்தட்ட ஒரு நெற்பயிரில் 30 கதிர் வரை கிடைக்கும். களைச்செடிகளை முற்றிலுமாக அப்புறப்படுத்தப்படுவதால் நெற்பயிர் நன்கு தூர்விட்டு வளர்வதால் கூடுதல் மகசூல் பெற இயலும். தற் போது இந்த களை வெட் டும் இயந்திரம் கீழ்பவானி பாசன சபை தலைவர்கள் சிலருக்கு இலவசமாக வேளாண் பொறியியல் துறை மூலம் வழங்கப்பட்டுள்ளது. தேவைப்படும் விவசாயிகள் பாசனசபை தலைவர்களிடம் இருந்து இலவசமாக பெற்று பயன்படுத்தி கொள்ளலாம். இவ்வாறு அதிகாரிகள் தெரிவித்தனர்.

## <u>விதை பரிசோதனை செய்து தரமானதை பயன்படுத்த அறிவுரை</u>

ஊட்டி, : நீலகிரி மாவட்ட விவசாயிகள் விதை பரிசோதனை செய்து தரமான விதை களை பயன்படுத்தி நல்ல மகசூல் பெறலாம் என விதை பரிசோதனை நிலையம் தெரிவித்துள்ளது. விதை பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் லாவண்யா ஜெயசுதா கூறியதாவது: நல்ல விதைகளை தேர்வு செய்வதில் விவசாயிகள் கவனமுடன் செயல் பட வேண்டும். நல்ல விதைகள் அதிகப்படியான முளைப்புதிறன் உடையதாகவும், அளவான ஈரப்பதம், இனத்தூய்மை, புறத்தூய்மை உடையதாகவும், பூச்சி, நோய் தாக்குதல் இல்லாமல் இருக்கும். இக்காரணங்களால் விதையின் முளைப்பு திறன் முக்கிய பங்கு வகிக்கிறது. ஊட்டியில் விதைப் பரிசோதனை நிலையத்தில் விதைகளின்

முளைப்பு திறன் குறித்து சோதனை செய்யப்படுகிறது. கேரட், பீட்ரூட் போன்ற பயிர்களில் விதையின் முளைப்பு திறன் 60 சதவீதம் ஆகும். பட்டாணி, பீன்ஸ் போன்றவற்றின் முளைப்பு திறன் 75 சதவீதமும், முள்ளங்கி, கீரை, கோஸ், நூக்கோல் போன்றவற்றில் 70 சதவீதமும் மற்றும் காலி பிளவரில் 65 சதவீதமும் முளைப்பு திறன் காணப் படும் பட்சத்தில் தான், அவைகளை தோட்டங்களில் பயிர் செய்ய முடி யும். அவ்வாறு பயிர் செய் யும் போது அதிக மகசூல் பெற முடியும். முளைப்பு திறன் குறைந்த விதைகளால் லாபம் இல்லை. எனவே விவசாயிகளும் விதை விற் பனை செய்வோரும் தங் கள் விதைகளின் முளைப்பு திறன் குறித்து அறிந்து கொள்ள விதைப் பரிசோ தனை செய்து கொள்ள லாம். கட்டணம் ரூ.30 மட்டும் ஆகும். விவசாயிகள் விதை பரிசோதனை செய்து தரமான விதை களை பயன்படுத்தி நல்ல மகசூல் பெறலாம்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## <u>2 அடி உயர வாழைமரத்தில் தரையை முட்டும் வாழைத்தார்புதிய ரகத்திற்கு வரவேற்பு</u>

பெரம்பலூர்,: முக்கனிகளில் மூன்றாவது கனியான வாழைப்பழத்திற்கு எப்போதும் மக்களிடம் நல்ல வரவேற்பு உள்ளது. சாப்பிட்டவுடன் பலருக்கு செரிமானத்திற்காகவும், பலருக்கு அதுவே சாப்பாடாகவும் இருப்பதால் வாழை பலரை வாழவைத்து வருகிறது. வாழையில் ரஸ்தாலி, பூவன், கற்பூரவல்லி, செவ்வாழை எனப் பலரகங்கள் உள்ளன. பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் இந்த ரகங்களை பயிரிட்டு வருகின்றனர். தற்போது வேப்பந்தட்டை, மலையாளப்பட்டி, தொண்டமாந்துறை, அன்னமங்கலம், விசுவக்குடி உள்ளிட்டப் பல்வேறு கிராமங்களில் தரைமுட்டி எனப்படும் புதியரக வாழைக்கு மவுசு அதிகரித்துள்ளது. தரைமுட்டி வாழை என்ற பெயருக்கு ஏற்றபடி 2அடி உயரமே வளரக்கூடிய இந்த வாழைமரத்தில் காய்க்கும் வாழைத்தார்கள் ஒருஅடி நீளத்தில் உள்ளது. இதனால் காய்த்துத் தொங்கும் வாழைத்தார்

கள் தரையை முட்டிக் கொண்டு இருப்பது, காண்போரின் கவனத்தை ஈர்க்கும் விதமாக உள்ளது. ஒரு கன்றை ரூ.5க்கு வாங்கி வந்து பயிரிட்டு வளர்த்து வரும் விவசாயிகளுக்கு இந்த வாழையில் இலைகளை அறுத்து விற்பனை செய்யவும் வாய்ப்புள்ளது. தண்ணீர் வசதியுள்ள பகுதியாக இருக்கும் பட்சத்தில், பராமரிப்பு செலவு குறைவு என்பதால் இந்த வாழைக்கு மவுசு அதிகரித்துள்ளது. வேப்பந்தட்டை அருகே அழகுவேல் என்பவரது வயலில் ஒரு ஏக்கர் பரப்பளவில் இந்த ரக வாழை சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

## நெல் மகசூல் இழப்பை தடுக்க நடவடிக்கை மானியத்தில் சிங்சல்பேட் உரம் விநியோகம் வேளாண்மை உதவி இயக்குநர் தகவல்

பரமக்குடி, :நெல் சாகுபடியில் மகசூல் இழப்பை தடுக்க சிங்சல்பேட் 50 சத வீத மானியத்தில் வழங்கப் பட உள்ளதாக நயினார்கோவில் வேளாண்மை உதவி இயக்குநர் மனோ கரன் கூறினார். இது குறித்து அவர் தெரிவித்ததாவது: பரமக்குடி அருகே நயினார்கோவில் ஒன்றியத்தில் மானாவாரியாக வும், பகுதி பாசனமாக வும் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. சமீபகாலமாக நெல்சாகுபடியில் து�த்தநாக நுண் ணூட்ட உரங்கள் பற்றாக்குறையால் மகசூல் இழப்பு அதிகமாக ஏற்படுகிறது. பயிருக்கு அதிகளவில் தேவைப்படும் தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்துக்கள் யூரியா, டிஏபி, சூப்பர்பாஸ்பேட் மூரியட் ஆப் பொட்டாஷ் போன்ற உரங் களை இடுவதன் மூலம் கிடைக்கிறது. மாறாக பயிரு க்கு குறைந்தளவு தேவைப் படும் ஏழு நுண்ணூட்ட உர ங்களில் முக்கியமான துத்த நாக சத்து பயிருக்கு போதிய ளவு கிடைக்காததால் பயிரின் வளர்ச்சி பாதிக்கப் பட்டு மகசூல் இழப்பு ஏற்படுகிறது. துத்தநாக சத்து பற்றாக்குறையால், நெல் பயிரின் வளர்ச்சி பாதிக்கப்பட்டு குட்டையாக காட்சியளிக் கும். வயலில் பயிரின் வளர் ச்சி சீராக இல்லாமல் திட்டு திட்டாக இருக்கும். நெல் பயிரின் இலைகள் சிவப்பு நிறமாக மாறி விடும். இதுபோன்ற அறிகுறி கள் பயிர் முளைத்த அல் லது நடவு செய்த 10 முதல் 30 நாட்களில் இருக்கும். இதை நிவர்த்தி

செய்ய பின் வரும் வழிமுறைகளை கை யாள வேண்டும். துத்தநாக சத்து பற்றாக்குறை இளம் பயிரிலேயே காணப்படுவ தால் அடியுரமாக இடுவது நல்லது. நிலத்தில் இட்டபிறகு உழவு செய்யக்கூடாது. நிலத்தில் ஏக்கருக்கு 10 கிலோ சிங்சல்பேட் உரத்தினை மேலாக து�வ வேண் டும். வளர்ந்த பயிரில் துத்த நாக பற்றாக்குறையின் அறிகுறிகள் தெரியும் பட்சத்தில் இலை வழி ஊட்டமாக சிங்சல்பேட் தெளிப்பது நல்ல பலனை தரும். இதற்கு கைத்தெளிப்பானை பயன்படுத்த வேண்டும். நயினார்கோ வில் வேளாண்மை விரிவா க்க மையங்களில் சிங்சல் பேட் மற்றும் கைத்தெளிப்பான்கள் போதிய அளவில் இருப்பு வைக்கப்பட்டு 50% மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>தயிர் விலை லிட்டருக்கு ரூ.12 கூடியது தனியார் பால் விலை இன்று முதல் மீண்டும் உயர்வு லிட்டருக்கு ரூ.4 அதிகரிப்பு</u>**

பால் விலை உயர்வு பட்டியல்

| பால் ரகம் | தனியார் பால் பழைய விலை | தனியார் பால் புதிய விலை | ஆவின் பால் தற்போதைய விலை |
|---|---|---|---|
| நிலைப்படுத்தப்பட்டது | ரூ.40 | ரூ.44 | ரூ.37 |
| சமன்படுத்தப்பட்டது | ரூ.44 | ரூ.48 | ரூ.41 |
| கொழுப்புசத்து செறிவூட்டப்பட்டது | ரூ.48 | ரூ.52 | ரூ.45 |
| கொழுப்பு சத்து நீக்கப்பட்டது | ரூ.34 | ரூ.38 | — |

தனியார் நிறுவன தயிர் விலை நிலவரம்

| ரகம் | அளவு | பழைய விலை | புதிய விலை |
|---|---|---|---|
| பாக்கெட் | 1 கிலோ | ரூ.60 | ரூ.72 |
| கப் | 1 கிலோ | ரூ.100 | ரூ.120 |
| பாக்கெட் | 175 கிராம் | ரூ.10 | ரூ.12 |
| கப் | 100 மில்லி | ரூ.10 | ரூ.12 |
| கப் | 60 மில்லி | ரூ.6 | ரூ.7 |

தனியார் பால் விலை இன்று (திங்கட்கிழமை) முதல் மீண்டும் உயர்த்தப்படுகிறது. லிட்டருக்கு ரூ.4 அதிகரிக்கிறது. அதேபோல், தயிர் விலையும் லிட்டருக்கு ரூ.12 கூடுகிறது. 1லு கோடி லிட்டர் பால் தமிழகத்தில் வசிக்கும் 7லு கோடி மக்கள் பயன்பாட்டிற்கு தினமும் 1லு கோடி லிட்டர் பால் தேவைப்படுகிறது. ஆனால், தமிழக அரசு

நிறுவனமான ஆவின் மூலம் 21 லட்சம் லிட்டர் பாலையே சப்ளை செய்ய முடிகிறது. மீதி தேவையான ஒரு கோடியே 29 லட்சம் லிட்டர் பாலை தனியார் நிறுவனங்களே வழங்கி வருகின்றன. தமிழகத்தில், இம்மாதம் 1-ந் தேதி முதல் ஆவின் பால் விலை லிட்டருக்கு ரூ.10 உயர்த்தப்பட்டது. கொள்முதல் விலை உயர்த்தப்பட்டதை காரணம் காட்டி இந்த விலையேற்றம் செய்யப்பட்டது. ஏற்கனவே, ஆந்திராவில் இருந்து தமிழ்நாட்டிற்கு பால் சப்ளை செய்யும் 4 தனியார் நிறுவனங்கள் கடந்த மாதம் (அக்டோபர்) 5-ந் தேதி முதல் பால் விலையை லிட்டருக்கு ரூ.2 உயர்த்தியது. லிட்டருக்கு ரூ.4 உயர்வு அதனைத் தொடர்ந்து, தமிழ்நாட்டில் உள்ள தனியார் பால் நிறுவனமான ஆரோக்கியா, இம்மாதம் 6-ந் தேதி முதல் பால் விலையை லிட்டருக்கு ரூ.4 உயர்த்தியது. இந்த பால் விலை உயர்வு அமலுக்கு வந்து 4 நாட்கள் ஆன நிலையில், ஆந்திரா மாநிலத்தில் இருந்து வரும் திருமலா, டோட்லா, ஹெரிட்டேஜ், ஜெர்சி ஆகிய பால் நிறுவனங்கள் இன்று (திங்கட்கிழமை) முதல் பால் விலையை மீண்டும் உயர்த்துகின்றன. அதாவது, லிட்டருக்கு ரூ.4 விலை அதிகரிக்கப்படுகிறது. அதுமட்டுமல்லாமல், வரலாறு காணாத வகையில் தயிர் விலையும் அதிரடியாக உயர்த்தப்பட்டுள்ளது. அதாவது, ஒரு கிலோ பாக்கெட் தயிருக்கு ரூ.12-ம், கப் தயிருக்கு ரூ.20-ம் விலை கூடியுள்ளது. இதுகுறித்து, தமிழ்நாடு பால் முகவர்கள் நலச்சங்க தலைவர் எஸ்.ஏ.பொன்னுசாமி நிருபர்களிடம் கூறியதாவது:- அரசு நிர்ணயிக்க வேண்டும். இந்த ஆண்டில் மட்டும் ஜனவரி, மார்ச், மே, அக்டோபர் ஆகிய மாதங்களில் 4 முறை தலா ரூ.2 வீதம் தனியார் பால் விலை உயர்த்தப்பட்டது. அதாவது, லிட்டருக்கு 8 ரூபாய் விலை உயர்த்தப்பட்டபோதும், உற்பத்தியாளர்களுக்கு ரூ.1.50 என்ற வகையிலேயே கொள்முதல் விலை உயர்த்தப்பட்டது. இந்த நிலையில்தான் தற்போது பால் விலை மேலும் ரூ.4 அதிகரிக்கப் பட்டுள்ளது. மின்சார கட்டணம், பஸ் கட்டணத்தை அரசு நிர்ணயிப்பது

போல, தனியார் பால் விலையையும் அரசு நிர்ணயிக்க வேண்டும். அப்போதுதான் விலையை கட்டுப்படுத்த முடியும். அரசு நிறுவனமான ஆவினுக்கு வரக்கூடிய பால் கொள்முதலை தடுப்பதற்காகவே இந்த விலை ஏற்றம் செய்யப்பட்டுள்ளது. எனவே, பால் விலை ஏற்றத்தை தடுக்க அவசர சட்டம் கொண்டுவர வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## உணவு தானிய உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை கலெக்டர் வெங்கடாசலம் தகவல்



திண்டுக்கல் மாவட்டத்தில் உணவு தானிய உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கலெக்டர் வெங்கடாசலம் கூறினார்.

கலெக்டர்ஆய்வு

திண்டுக்கல் மாவட்டம் குஜிலியம்பாறை ஒன்றியம் செல்லக்குட்டியூர் ஊராட்சி பகுதியில் வேளாண்மை துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை, கலெக்டர் வெங்கடாசலம் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது திருந்திய நெல்சாகுபடி முறையில் பயிரிடப்பட்ட நெல் பயிர்கள், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தில் பயிரிடப்பட்ட மக்காச்சோளம் மற்றும் இதர பயிர்களை கலெக்டர் பார்வையிட்டார். அப்போது விவசாய பயிர்களின் வளர்ச்சி, சாகுபடி முறைகள் மற்றும் வேளாண்மை திட்டங்களின் பயன்கள் குறித்து விவசாயிகளிடம், அவர் கேட்டறிந்தார். இதுகுறித்து கலெக்டர் வெங்கடாசலம் கூறியதாவது:-

கூடுதல் மழை மாவட்டத்தில் பருவமழை தேவையான அளவு பெய்து வருவது அனைவருக்கும் மகிழ்ச்சியான ஒன்றாகும். எனவே, விவசாயிகள் தங்களுடைய விளை நிலங்களில் சாகுபடி பணியில் மும்முரமாக ஈடுபட்டு

வருகின்றனர். திண்டுக்கல் மாவட்டத்தை பொறுத்தவரை 2014-2015 அக்டோபர் மாதம் முடிய 770 மி.மீ. மழை பெய்துள்ளது. இது வழக்கமான சராசரியை விட 163 மி.மீ. அதிகம் ஆகும். உணவு தானிய உற்பத்தி இதன் மூலம் ஆண்டு சராசரி சாகுபடி பரப்பளவான 1.75 லட்சம் ஹெக்டேரில் சாகுபடி செய்வதற்கு ஏற்ற சூழ்நிலை நிலவுகிறது. மாவட்டம் முழுவதும் நெல், மக்காச் சோளம், தட்டைப்பயறு, உளுந்து, பாசிப்பயறு, நிலக்கடலை, பருத்தி மற்றும் கரும்பு ஆகியவை பரவலாக பயிர் செய்யப்பட்டு வருகின்றன. எனவே, உணவு தானிய உற்பத்தி இலக்கான 5 லட்சம் மெட்ரிக் டன்னை விட கூடுதலாக, உற்பத்தி செய்து சாதனை படைக்க வேண்டும். இதற்கு தேவையான நடவடிக்கைகள் வேளாண்மை துறை மூலம் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும் தேவையான அளவு உரங்கள் உள்ளிட்ட இடுபொருட்கள் அனைத்தும் தடையின்றி விவசாயிகளுக்கு கிடைத்திட ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. இவ்வாறு கலெக்டர் வெங்கடாசலம் கூறினார். இந்த ஆய்வின் போது, வேளாண்மை இணை இயக்குனர் சம்பத், உதவி இயக்குனர் ரவி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் சாலிதளபதி மற்றும் அதிகாரிகள் உடன் இருந்தனர்.

## கோபி வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் ரூ.10 லட்சத்துக்கு வாழைப்பழம் ஏலம்



கோபிசெட்டிபாளையம், கோபி வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் ரூ.10 லட்சத்து வாழைப்பழம் ஏலம் போனது.

வாழைப்பழம்

கோபிசெட்டிபாளையம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் வாரந்தோறும் புதன்கிழமை மற்றும் சனிக்கிழமை

களில் வாழைப்பழம் மற்றும் தேங்காய் ஏலம் நடைபெறும். அதுபோல் நேற்று முன்தினம் நடந்த ஏலத்திற்கு விவசாயிகள் 14 ஆயிரம் வாழைப்பழத்தார்களை விற்பனைக்காக கொண்டு வந்திருந்தனர். இதில் கதலி ரக வாழைப்பழம் (கிலோ) 30 ரூபாய்க்கும், நேந்திரன் ரகம் (கிலோ) 28 ரூபாய்க்கும் விற்பனை ஆனது. இதேபோல் செவ்வாழை தார் ஒன்று ரூ.500–க்கும், ரொபஸ்டா ரூ.420–க்கும் (தார்), தேன்வாழை ரூ.550–க்கும் (தார்), ரஸ்தாளி ரூ.425–க்கும் (தார்), மொந்தன் ரூ.350–க்கும் (தார்), பூவன் ரூ.370–க்கும் (தார்), பச்சைநாடன் ரூ.300–க்கும் (தார்) விற்பனை ஆனது. மொத்தம் வாழைப்பழங்கள் ரூ.10 லட்சத்துக்கு ஏலம் போனது. இந்த வாழைப்பழங்களை திருப்பூர், பெருந்துறை உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வந்த வியாபாரிகள் வாங்கி சென்றனர்.

<u>தேங்காய்</u>

இதேபோல் நடந்த தேங்காய் ஏலத்திற்கு விவசாயிகள் 13 ஆயிரம் தேங்காய்களை விற்பனைக்காக கொண்டு வந்தனர். இதில் தேங்காய் ஒன்று குறைந்தபட்ச விலையாக 9 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 17 ரூபாய்க்கும் விற்பனை ஆனது. மொத்தம் ரூ.1 லட்சத்து 25 ஆயிரத்துக்கு தேங்காய் ஏலம் போனது.

## <u>முகூர்த்த நாளையொட்டி கடும் கிராக்கி: மல்லிகைப்பூ ஒரு கிலோ 2 ஆயிரம் ரூபாய்</u>



முகூர்த்தநாளையொட்டி மார்க்கெட்டில் மல்லிகைப்பூ கிலோ 2 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையானது. <u>முகூர்த்தநாள்</u>

மதுரை மாட்டுத்தாவணி பூ மார்க்கெட்டில் நேற்று மல்லிகைப்பூ கிலோ ரூ.2 ஆயிரத்துக்கு விற்பனையானது. வரத்து குறைவு எதிரொலியாகவும்,

இன்று முகூர்த்த தினம் என்பதாலும் பூக்களின் விலை பல மடங்கு அதிகரித்திருந்தது. இதுகுறித்து வியாபாரிகள் கூறியதாவது:–

மல்லிகைப்பூ விளைச்சல் குறைந்து வருகிறது. இதனால் மார்க்கெட்டுக்கு பூ வரத்து குறைந்துள்ளது. கடந்த சில வாரங்களாக கிலோ 300 ரூபாய்க்கு விற்பனையாகி வந்த மல்லி, கடந்த சில நாட்களாக 2 மடங்கு விலை அதிகரித்து விற்பனையானது. நாளை (இன்று) முகூர்த்த தினம் என்பதால் பூக்களுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

ரூ.2 ஆயிரம்

இதனால் அவற்றின் விலையும் பன்மடங்கு அதிகரித்துள்ளது. இன்றைய நிலவரப்படி மல்லி கிலோ ரூ.2 ஆயிரம் முதல் ஆயிரத்து 500 ரூபாய் வரையும், கனகாம்பரம் 2 ஆயிரம் ரூபாய்க்கும், பிச்சி ரூ.700 முதல் 500 ரூபாய் வரையும், முல்லை ரூ.800–க்கும் விற்பனையானது. ஊட்டி, பெங்களூர் ரோஜா பூக்கள் ஒரு கட்டு (20 பூக்கள்) ரூ.150 முதல் 200–க்கும், சம்பங்கி 250 ரூபாய்க்கும், மெட்ராஸ் மல்லி ரூ.800–க்கும் விற்பனையானது. மற்ற பூக்களின் விலை சீராகவே இருந்தது.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

## 3 ஆண்டுகளுக்கு பிறகு உப்பாறு அணையின் நீர்மட்டம் 15 அடியாக உயர்ந்தது



தாராபுரம் அருகே உள்ள உப்பாறு அணையின் நீர்மட்டம் 3 ஆண்டுகளுக்கு பிறகு 15 அடியாக உயர்ந்தது.

உப்பாறு அணை

தாராபுரம் அருகே உப்பாறு அணை அமைந்துள்ளது. இந்த அணைக்கு பரம்பிக்குளம், ஆழியாறு திட்டத்தில் உள்ள தொகுப்பணைகளில் நீர் திருப்திகரமான இருக்கும் நிலையில், பரம்பிக்குளம், ஆழியாறு திட்ட

பாசன பகுதிகளுக்கு தேவையான நீர்போக உபரி நீரை பரம்பிக்குளம் பிரதான கால்வாய் மூலம் கொண்டு வந்து அரசூர் என்ற இடத்தில் அமைக்கப்பட்டுள்ள ஷட்டர் (வெளிப்போக்கி) மூலமாக உப்பாற்றில் திருப்பி விட்டு, உப்பாறு அணைக்கு தண்ணீர் கொண்டு செல்லவும், பரம்பிக்குளம், ஆழியாறு திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அரசூர் ஷட்டரில் இருந்து உப்பாறு அணை தூரம் 46 கிலோ மீட்டராகும். உப்பாறு அணை நிரம்பி 3 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டதாலும், குடிநீருக்கும், கால்நடை வளர்ப்புக்கும் பி.ஏ.பி. பிரதான கால்வாய் மூலம் அரசூர் ஷட்டரை திறந்து தண்ணீர் விடவேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று உப்பாறு அணைக்கு பி.ஏ.பி.பிரதான கால்வாய் வழியாக தண்ணீர் திறந்து விடப்பட்டது.

15 அடி நீர்மட்டம்

இந்த தண்ணீர் நெகமம் அருகே உள்ள அரசூர் ஷட்டர் வழியாக 46 கிலோ மீட்டர்தூரம் கடந்து உப்பாறு அணையை வந்து அடைந்தது. கடந்த 5 நாட்களாக அணைக்கு விநாடிக்கு 390 அடி வீதம் தண்ணீர் வந்தது. இதையடுத்து அணையின் நீர்மட்டம் 14.90 அடியாக உயர்ந்தது. அணையின் நீர்மட்டம் 24 அடியாகும். அணையின் நீர்பிடிப்பு பரப்பு 349 சதுர மைல் ஆகும். நீர் தேங்கும் பரப்பு 1,100 ஏக்கர். அணையின் நீளம் 2,256 மீட்டர். அணையின் கொள்ளளவு 328.16 மில்லியன் கனஅடி.

உப்பாறு அணையில் இருந்து 2 கால்வாய்கள் வெட்டப்பட்டு, அதன் மூலமாக பாசனத்திற்கு நீர் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. அணையின் இடது கரையில் வெட்டப்பட்டுள்ள இடதுகரை கால்வாய் 17.29 கிலோ மீட்டர் தூரம். இதன் மூலம் 3,550 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. உப்பாற்றின் வலது கரையில் வெட்டப்பட்டுள்ள வலதுகரை கால்வாய் 12.47 கிலோ தூரம் செல்கிறது. இந்த கால்வாய் மூலம் 2,510 ஏக்கர் நிலம் பாசனம் பெறுகிறது. உப்பாறு அணையில் இருந்து

வேலயுதம்பாளையம், கெத்தல்ரேவ், தொப்பம்பட்டி, புத்தூர், நஞ்சியம் பாளையம், சூரியநல்லூர், கண்ணன்கோயில், சங்கரண்டம்பாளையம் ஆகிய கிராமங்களில் 6,060 ஏக்கர் நிலம் பாசன வசதியை அடைந்துள்ளது.

தண்ணீர் திறக்கப்படுமா?

தற்போது அணையின் நீர்மட்டம் 14.90 அடியாக உள்ள நிலையில் பாசனத்திற்கு தண்ணீர் திறக்க வேண்டும் என்று உப்பாறு பாசன விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். விவசாயிகளின் கோரிக்கை யை ஏற்று விவசாயத்திற்கு தண்ணீர் திறந்துவிடப்படுமா? என்று உப்பாறு அணை பராமரிப்பு பொதுப்பணித்துறை உதவி பொறியாளரிடம் கேட்டபோது அவர் கூறியதாவது:–

பரம்பிக்குளம், ஆழியாறு திட்டத்தில் பி.ஏ.பி.3–ம் மண்டல பாசனத்திற்கு தண்ணீர் கொடுக்க வேண்டி இருப்பதால் உப்பாறு அணைக்கு வந்து கொண்டிருந்த தண்ணீர் கடந்த 3 நாட்களுக்கு முன்பு நிறுத்தப்பட்டு விட்டது. தற்போது உப்பாறு அணையின் நீர்மட்டம் 14.90 அடி. அணையில் 252 மில்லியன் கன அடி தண்ணீர் உள்ளது. எனவே பாசனத்திற்கு தண்ணீர் திறப்பது குறித்து எந்த திட்டமும் இல்லை. வருகிற ஜனவரி மாதம் உப்பாறு அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார். கடந்த 3 ஆண்டுகளாக உப்பாறு அணைக்கு வறண்டு போனதால் இந்த அணையை நம்பி உள்ள 6,060 ஏக்கர் பாசன பூமியும் பாலைவனமானது. ஆயிரக்கணக்கான தென்னை மரங்களும் காய்ந்துவிட்டது. தற்போது அணைக்கு தண்ணீர் வந்து இருப்பது விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

## விவசாயிகளுக்கு வழிகாட்டியாக வேளாண்மைத்துறை இருக்க வேண்டும் கலெக்டர் நந்தகோபால் பேச்சு



விவசாயிகளுக்கு வழிகாட்டியாக வேளாண்மைத்துறை இருக்க வேண்டும் என்று, சோளிங்கரில் நடந்த விழாவில் மாவட்ட கலெக்டர் நந்தகோபால் கூறினார்.

உரம்தயாரிப்புபணி

சோளிங்கர் பேரூராட்சி சார்பில் திடக்கழிவு மேலாண் திட்டத்தின்கீழ் மக்கும், மக்காத குப்பைகள் பிரித்தெடுத்து உரம் தயாரித்தல் பணி நடந்து வருகிறது. அந்த பணிகளை கலெக்டர் நந்தகோபால் பார்வையிட்டார். பின்னர் வேளாண்மை துறை சார்பில் நடைபெற்ற விவசாயிகளுக்கு பயிர் சாகுபடிக்கான வேளாண் இடுபொருட்கள் மற்றும் இயற்கை உரம் வழங்குதல் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருட்களை வழங்கினார். அப்போது அவர் பேசியதாவது:– சிறந்த பராமரிப்பு சோளிங்கர் பேரூராட்சி முன்மாதிரி பேரூராட்சியாக செயல்பட்டு வருகிறது. குறிப்பாக 27 வகை குப்பைகளை தரம் பிரித்து அதில் இருந்து மக்கும், மக்காத குப்பைகளை தனித்தனியாக்கி இயற்கை உரம், மண்புழு உரம் தயாரித்து வருகின்றனர். சோளிங்கரில் குப்பை அதிகம். அதை சேகரித்து நல்ல முறையில் உரம் தயாரித்து வருகின்றனர். பிளாஸ்டிக்கை அழிக்க முடியாது. ஆனால் மறு சுழற்சியில் பயன்படுத்தலாம். பிளாஸ்டிக் மறு சுழற்சியில் சாலைகள் போட பயன்படுத்தப்படுகிறது. சோளிங்கரில் குளம், பூங்கா ஆகியவற்றை சிறப்பாக பராமரிக்கின்றனர். இதுதவிர மரக்கன்றுகள் நட்டு, நல்ல முறையில் பராமரிக்க வேண்டும். இவ்வாறு மரங்கள் நட்டு பராமரிப்பதை பேரூராட்சி சவாலாக எடுத்து மேற்கொள்ள வேண்டும். வழிகாட்டியாக... விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருட்கள் வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகள் இயற்கை உரத்தை பயன்படுத்தி அதிக மகசூல் பெற வேண்டும். ரசாயன உரங்கள் எப்படி பாதிப்பை ஏற்படுத்துகின்றன என்பதை அதிகாரிகள் விளக்கி கூறினர். இயற்கை உரங்களால் மண்ணின் தன்மை மாறாது. பயிர்கள் எப்படி வளரும் என்பதை இயற்கைதான் முடிவு செய்கிறது. நாம் இயற்கை உரங்களை

பயன்படுத்தி அதிக விளைச்சலை தர இயற்கைக்கு ஒத்துழைக்க வேண்டும். குப்பை களை பிரித்தெடுத்து தயாரிக்கப்படும் இயற்கை உரம் மற்றும் மண்புழு உரம் ஆகியவை குறைந்த விலையில்தான் விற்கப்படுகின்றன. எனவே, விவசாயிகள் இயற்கை உரத்தை வாங்கி பயன்படுத்த வேண்டும். அதிக விளைச்சலை பெற பல்வேறு வழிமுறைகளை எடுத்துக்கூறி, வேளாண்மை துறை விவசாயிகளுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். நிகழ்ச்சிக்கு சோளிங்கர் பேரூராட்சி மன்ற தலைவர் ஏ.எல்.விஜயன் தலைமை தாங்கினார். வேளாண்மை இணை இயக்குனர் ஜெயசுந்தர், உதவி இயக்குனர் வாசுதேவரெட்டி, பேரூராட்சிகள் உதவி செயற் பொறியாளர் சேகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் சோளிங்கர் பேரூராட்சி செயல் அலுவலர் அன்புசெல்வம், பேரூராட்சிமன்ற உறுப்பினர்கள் சுரேஷ், பிரியதர்ஷினி மணிகண்டன், உதவி வட்டார வளர்ச்சி அலுவலர் கஜபதி, விவசாயிகள், பேரூராட்சி மற்றும் வேளாண்மைத்துறை அதிகாரிகள், அலுவலர்கள் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

**<u>விவசாய பாசனத்துக்காக கோமுகி அணையில் இன்று தண்ணீர் திறப்பு</u>**



கள்ளக்குறிச்சி, விவசாய பாசனத்துக்காக கோமுகி அணையில் இன்று தண்ணீர் திறந்து விடப்படுகிறது. கோமுகி அணை கள்ளக்குறிச்சி அருகே கல்வராயன்மலை அடிவாரத்தில் கோமுகி அணை உள்ளது. 46 அடி கொள்ளளவு கொண்ட இந்த அணைக்கு ஆண்டு தோறும் கல்வராயன்மலை நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்யும் மழை காரணமாக பொட்டியம், கல்படை, மாயம்பாடி ஆகிய ஆறுகள் வழியாக

வரும் தண்ணீரை பொதுப்பணித்துறையினர் அணை பாதுகாப்பு கருதி 44 அடி தேக்கி வைக்கப்பட்டு பாசனத்திற்கு திறந்து விடப் படுவது வழக்கம். ஆண்டு தோறும் அக்டோபர் அல்லது நவம்பர் மாதங்களில் பழைய மற்றும் புதிய பாசன வாய்க் கால்கள் மூலம் திறந்து விடப்படும் தண்ணீரால் வடக்கனந்தல், கச்சிராய பாளையம், கள்ளக்குறிச்சி உள்ளிட்ட பகுதிகளில் உள்ள 10 ஆயிரத்து 860 ஏக்கர் விளைநிலங்கள் நேரடியாகவும் 5 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் மறைமுகமாகவும் பாசன வசதியை பெற்று வருகிறது. இந்தநிலையில், கடந்த 2 ஆண்டுகளாக கல்வராயன் மலை நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தென்மேற்கு மற்றும் வட கிழக்கு பருவமழை பொய்த்து போனதாலும் கடும் கோடை வறட்சி காரணமாகவும் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விட்டதாலும் அணையின் நீர்மட்டம் 17 அடியாக குறைந்தது. இதனால், கோமுகி அணை பாசன விவசாயிகள் கடந்த 2 ஆண்டுகளாக சரிவர விவசாய பணிகளை மேற் கொள்ள முடியாமல் அவதிப்பட்டு வந்தனர். இன்று திறப்பு இந்நிலையில், கடந்த மாதம் வங்கக்கடலில் ஏற்பட்ட குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை மற்றும் வடகிழக்கு பருவமழை காரணமாக கல்வராயன்மலை நீர்ப்பிடிப்பு பகுதிகள் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் தொடர்மழை பெய்தது. இதனால், வறண்டு கிடந்த கோமுகி அணையின் நீர்மட்டம் 10 நாட்களில் கிடுகிடுவென 44 அடியாக உயர்ந்தது. எனவே பாசனத்திற்கான கோமுகி அணையில் தண்ணீர் திறக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடு த்தனர். அதன்படி கோமுகி அணையில் இருந்து விவசாய பாசனத்துக்காக தண்ணீர் திறப்பு விழா இன்று(திங்கட்கிழமை) நடக்கிறது. விழாவுக்கு கலெக் டர் சம்பத் தலைமை தாங்குகிறார். ஊரக தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் மோகன் கலந்து கொண்டு, கோமுகி அணை பழைய பாசன வாய்க் காலில் வினாடிக்கு 60 கனஅடியும், புதிய பாசன வாய்க்காலில் வினாடிக்கு 50 கனஅடி தண்ணீரும் பாசனத்துக்காக திறந்து வைக்கிறார்.